பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 2	ஞாயிறு 21-5-39 பிரமாதிஸு வைகாசிமீ 7உ	முத்து 8

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
காந்தி—போஸ் கடிதங்கள்	... ...	224
குறிப்பு	... ...	225
தென்றல் காற்று	... ...	227
உலகப் போக்கு	... ...	229
புத்தக விமர்சனம்	... ...	230
ஜடாதரன் கல்யாணம்	... ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி	231
சமூகத் தியாகி	... ஸ்ரீ. டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி	235
சூர்ய நமஸ்காரம்	... ... ஸ்ரீ. பி. மாணிக்கம்	238
அபிப்ராயபேதம்	... ... (கேஸரி)	239
வத்ஸலாவின் கடிதம்	... ஸ்ரீமதி கமலா பத்மநாபன்	243
சிறுவர் பகுதி	... ... ஸ்ரீ. வி. சங்கரன்	247
பாலஸ்தீனம்	... ஸ்ரீ. த. கிருஷ்ணமூர்த்தி	249
அரிசி வியாபாரம்	... ...	252

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல



காந்தி-போஸ் கடிதங்கள்

சுமார் ஒன்றரை மாத காலம் காந்திஜிக்கும் ஸ்ரீ போஸுக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்து—தந்திப் போக்குவரத்து பூராவும் வெளியாகிவிட்டது. அது வெளியானது பிசகு என்று கருதுவதற்கு இடமேயில்லை. சம்பாஷணைகள் நடந்துகொண்டிருக்கும்பொழுது அவை அப்பொழுதப்பொழுது வெளியாவது உசிதமில்லையே தவிர, நெருக்கடி ஒருவாறு கத் தீர்ந்துவிட்ட பிறகு அவை வெளியாவதில் ஒருவிதமான அபாயமும் இல்லை. இதில் அந்தரங்க விஷயம் ஒன்றும் இல்லை. நாட்டின் பொது விஷயம். ஆகையால் நாம் கடிதங்கள் பிரசுரமானதை வரவேற்கிறோம்.

அதிலிருந்து பல விஷயங்கள் தெளிவாகின்றன. முதலாவதாக ஸ்ரீ போஸ் சும்மா காலம் கடத்துகிறார் என்று நம்மில் பலர் எண்ணியிருந்தது தவறு என்பது வியக்தமாகிறது. காந்திஜியை தன்னுடைய வழிக்குக் கொண்டுவர ஸ்ரீ போஸ் சர்வ பிரயத்தினமும் செய்திருக்கிறார் என்று தெரிகிறது. காந்திஜியின் ஒத்துழைப்பைப் பெற ஸ்ரீ போஸ் நிலைமையைத் தான் நிதானித்தபடி வெகு அழகாக விளக்கி விளக்கிக் கூறியிருக்கிறார்.

அவருடைய ஆழ்ந்த தேச பக்தியும் காந்திஜியின் தலைமைக்கு அவர் வைத்திருக்கும் மதிப்பும் கடிதங்களின் சாரமாக இருக்கின்றன. அவர் தன்னுடைய அபிப்பிராயத்தை காந்திஜிக்காகக்கூட விட்டுக்கொடுக்கத் தயாரில்லை என்பதும் தெரிகிறது. காங்கிரஸின் தற்காலப் போக்கில் ஒரு மந்தம் ஏற்பட்டுவிட்டது என்று அவர் மனப்பூர்வமாக நம்புகிறார். இடதுசாரார்கள்தான் அந்தப் போக்கை தீவிரப்படுத்தமுடியும் என்றும் நம்புகிறார். காந்திஜி அஹிம்ஸையைப்பற்றி ரொம்ப அதிகமாகக் (அனுவசியமாக) கவலைப்படுகிறார்; நாட்டில் அவர் எண்ணுவதுபோல அவ்வளவு அஹிம்ஸா விரோதமான மனப்பான்மை இல்லை; ஆகையால் ஏகாதிபத்திய எதிர்ப்புப்போரை ஆரம்பிக்க காந்திஜி தயங்குவது சரியில்லை; ஒரு சிறு சமஸ்தானத்தின் விஷயத்தில் தனது கவனத்தைச் செலுத்தி காந்திஜி தேசத்தின் செல்வத்தை (காந்திஜியின் சக்தியை) வீணாக்குவது பிசகு;—இவையெல்லாம் ஸ்ரீ போஸின் கருத்துகள்.

காந்திஜி ஒன்றையாவது ஒத்துக்கொள்ளவில்லை. ஸ்ரீ போஸின் இந்த மூலாதாரக்கொள்கைகளை காந்திஜி ஒப்புக்கொள்ளவில்லை. காங்கிரஸின் உள்ளே ஊழல்கள் இருக்கின்றன என்கிறார். (இவற்றைப் பிரமாதப் படுத்தக்கூடாது, அவ்வளவு ஒன்றும் மோசமில்லை என்பது ஸ்ரீபோஸின் கருத்து) அவற்றை முதலில் களைந்தெறிய வேண்டும்; அஹிம்ஸா விரோதமான மனப்பான்மை இருக்கிறது—ஆகையால் நாடு இப்பொழுது ஒரு பொது ஜன இயக்கத்திற்குத் தயாரில்லை. (தயார்தான்; இயக்கம் ஆரம்பித்தாலே ஊழல்கள் தானகவே அற்றுப் போய் விடும் என்கிறார் ஸ்ரீபோஸ்.) அப்படித் தயாரின்றி ஏகாபத்தியத்திற்கு ஆறு மாத எச்சரிக்கை கொடுப்ப தென்பது சக்தியற்ற மிறட்டலாகும்; ராஜ் கோட் யுத்தம் அந்த சமஸ்தானத்துடன் நின்று விடவில்லை. அதன் தத்துவம் அகில இந்தியாவிற்கும் பொருத்தமானது; ஆகையால் உபவாசம் கிடந்த சிரமும் மற்ற சிரமும் வீணில்லை; "என் முறையை, என் வழியை, நான் நன்கறிவேன் என்றே எண்

(226-ம் பக்கம் பார்க்க)

குறிப்பு

அபாய ஸ்தானம்

டான்ஜிக் ஐரோப்பாவின் அபாய ஸ்தானம் என்கிறார்கள் எல்லோரும். ஜெர்மனி அதைத் தொட்டால் உடனே ஐரோப்பாவில் யுத்தத் தீ மூண்டுவிடுமாம். அதுதான் வெடியின் திரிமுனைபோலும்! ஆனால் ஹிட்லர் இந்தத் தடவை அவ்வளவு தடபுடலாக ஒன்றையும் செய்யக் காணோம். ஜெர்மன்—இதாலிய ராணுவ ஒப்பந்தம் நடந்தது வாஸ்தவம்; காலனிகள் பற்றிப் பிரசாரம் ஆரம்பித்துவிட்டதாம். ஆனால் நிலைமை மட்டும் கிணற்றில் கல் போட்டது என்பார்களே அந்தமாதிரி இருக்கிறது. ஹிட்லர் சும்மாதான் இருக்கிறாரா, பாய்வதற்குமுன் பதுங்குகிறாரா என்று தெரியவில்லை.

குடை வாளாயிற்று!

சேம்பர்லேனின் சமாதானக்குடை இப்பொழுது போர் வாளாக மாறிவிட்டதாக யாரோ ஒரு கார்ட்டூன் போட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இப்பொழுது சேம்பர்லேன் பேசும் பேச்சுகளெல்லாம் வீராப்பு மிகுந்துதான் இருக்கின்றன. மீசையை முறுக்கி விட்டுக்கொண்டுதான் பேசுகிறார். "என்ன தைரியம் இவருக்கு!" என்று ஹிட்லரும் முஸோலினியும் திகைத்துப் போகும்படியாக இருக்கிறது அவர் போக்கு இப்பொழுது. இதற்கு முன் கம்மென்று இருந்தவர் இப்பொழுது வாரத்திற்கொரு பிரசங்கம் செய்கிறார். பயமுறுத்தலா, அல்லது என்ன என்பது தெரியவேண்டும்.

"எங்கள் ஜோலிக்கு வந்தால்—"

முஸோலினி ஜனநாயகங்களை மிரட்டுகிறார். "நாங்கள் அவர்கள் ஜோலிக்குப் போனோமா? நாங்கள் இதுவரையில் கபளீகரம் செய்த நாடுகளில் அவர்களுக்கு ஏதாவது பாத்தியதை உண்டா? எங்கள் ஜோலிக்கு ஏன் வருகிறார்கள்?" என்று கேட்கிறார். சர்வாதிகாரிகளின் "நியாயமான கோரிக்கைகள்" நிறைவேறுவதற்குத் தடையாக ஜனநாயகங்கள் நிற்பது விசித்திரமாக இருக்கிறதாம். அதற்காக ஒரு பெரிய யுத்தம் வருவதென்றால்—அது அர்த்தமில்லை. ஆனால் அதற்காக பயப்படமாட்டோம், தயங்கமாட்டோம் என்று முஸோலினி மறுபடியும் கர்ஜிக்கிறார்.

"உண்டு, இல்லை"

வீரவாலா காந்திஜி ராஜ்கோட்டிற்குத் திரும்பி வரக்கூடாதென்று தந்தியடித்தார்; ஆனால் அவர் திரும்பி வருவதற்கு அவசியமில்லாமல் செய்தால் அல்லவா அவர் நிற்க முடியும்?

காந்திஜி 12-ம் தேதி ராஜ்கோட் போய் விட்டார். இந்த தடவை காந்திஜி "உண்டு; இல்லை" என்று முடித்துக் கொண்டுதான் ராஜ்கோட்டை விட்டு வெளியில் வருவார்.

வைஸ்ராய் என்ன செய்கிறார்? அவர் வாக்குறுதியைப் பற்றி காந்திஜிகூட பேச்சே எடுக்கவில்லை. தாகூர்சாகிப் ஒப்பந்தத்தின்படி நடந்து கொள்ளுமாறு செய்வதாக அவர் ஒப்புக் கொண்டதால்தானே உபவாசம் முடிந்தது?

ராஜ்கோட் சிக்கல் சத்தியாக்கிரக சாஸ்திரத்திற்கு ஒரு வியாக்கியானமாக ஏற்படும். காந்திஜி ராஜ்கோட்டை தனது ஆராய்ச்சிசாலை என்கிறார். அவருடைய முன்முறைகளை அறிந்தவர்களுக்கு அவர் அதிலிருந்து வெற்றி பெறாமல் வெளியே வரமாட்டார் என்பது தெளிவாகும்.

யார் மேல் கோபம்?

விற்பனை வரி மசோதா விவாதத்தின் கடைசியில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் ஒரு அசட்டுத்தனம் செய்து விட்டார்கள். சர்க்கார் அவர்கள் கட்சியைக் கொஞ்சங்கூட கவனிக்கவில்லை யென்று கோபங்கொண்டவர்களாய் தங்கள் கண்டனத்தைத் தெரிவிப்பதற்காக அசெம்பிளியை விட்டு வெளியேறினார்கள்.

யார் மேல் கோபம்? அசெம்பிளியின் பேரில்—அதாவது கட்டிடத்தின் பேரில்—இருக்க முடியாது. ஏனென்றால் அது மிகவும் சௌக்கியமான இடம் என்று ஸ்ரீ அப்துல் ஹமீத்கான் முதலியவர்களே சொல்லியிருக்கிறார்கள். தலைவர் பேரிலா? இல்லவேயில்லையென்று சத்தியம் செய்துவிட்டுத்தான் வெளியேறினார்கள். பிரதம மந்திரி பேரிலும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

சர்க்கார் பேரில் கோபம்! அதாவது அந்த சர்க்கார் இன்று பதவியிலிருப்பதற்குக் காரணமான ஜனங்களின் பேரில் கோபம். இதற்கு எங்கே போய் முட்டிக்கொள்ளுவது? அவர்களிடமே போய்தான் முட்டிக் கொள்ளவேண்டும். அதற்கு தைரியமுண்டா வெளியேற்றம் செய்த அங்கத்தினர்களுக்கு? இல்லாவிட்டால் இந்த வெளியேற்றத்திற்கு ஒரு விதமான அர்த்தமும் இல்லை. வெளியேற்றத்திற்கு பூரண பலம் கொடுக்க விரும்பினால் அவர்கள் தங்கள் தொகுதிகளிலிருந்து வெளியேறி மறு தேர்தலுக்கு நிற்கவேண்டும். செய்வார்களா?

பொறுப்பாட்சியின் கீழ் எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்களும் தான் கொண்டுவரலாம்; அதற்கு வேண்டிய பலம்கூட எதிர்க்கட்சியில் இல்லை யென்றால் அது யார் பிசகு?

(224-ம் பக்கத் தொடர்ச்சி)

னுகிறேன். நான் சொல்வதுதான் சரி என்று எனக்குத் தீர்மானமாகத் தெரிகிறது. அது பிசகென்றால் நிரூபியுங்கள். நான் சத்தியாக்கிரக தளபதி என்ற பெயருக்கு லாயக்கில்லை என்று எனக்கும் புலப்படட்டும். இனி மேல் என்னால் ஒன்றும் ஆகாது என்று ஒப்புக்கொள்ளும்படி செய்யுங்கள்" என்கிறார் காந்திஜி.

எனவே காந்திஜிக்கும் ஸ்ரீபோஸுக்கும் இடையே அபிப்பிராய பேதம் கொஞ்சம் நஞ்சமல்ல. அஜகஜாந்திரமான அடிப்படை பேதம். இதில் சமரஸம் என்றால் எப்படி முடியும்? இருவரும் தங்கள் தங்கள் வழியே சென்று இயன்றதை நாட்டிற்குச் செய்வது தான் மேலான முறை. இதனால் நாட்டிற்கு ஒரு விதமான கெடுதலும் கிடையாது. காங்கிரஸிற்கு பல ஹீனமென்பதும் இல்லை. சொல்லப்போனால் இன்னும் கொஞ்சம் அதிக ஊக்கமும் பலமும் அது பெறும் என்பதில் சந்தேகமில்லை.

காந்திஜி கொஞ்சங்கூட விட்டுக் கொடுக்காமல் தான் பிடித்த பிடியாக நின்றதும் சரி; ஸ்ரீபோஸும் காந்திஜிக்குப் பணிந்து தன் கொள்கைகளைக் கைவிடாது நின்றதும் பாராட்ட வேண்டிய விஷயம்.

ஆனால் ஒருவிஷயத்தில் மட்டும் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. இன்று நாட்டைத் தலைமை வகித்து நடத்தக்கூடிய சக்தியும் செல்வாக்கும் வாய்ந்தவர் காந்திஜி ஒருவர்தான்; அவருடைய கொள்கைகளுக்குத்தான் நாட்டில் பெருவாரி ஆதரவு இருக்கிறதென்பதும் நிச்சயம். ஆகையால் திட்டத்தை நடத்த அவர் காங்கிரஸைப்பலப்படுத்துவது இயற்கைதான். காங்கிரஸ்தானே அவருடைய அஸ்திரத்தைத் தொடுக்கும் அர்ஜுனன்?

வாழ்க்கையே வாழ்க்கை

(எஸ். வி. வி.)

பிரசித்தி பெற்ற ஹாஸ்ய எழுத்தாளரான எஸ். வி. வி. எழுதிய ஹாஸ்யக் கட்டுரைகளில் இருபத்து இரண்டைத் திரட்டி புஸ்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. விலை அணா 12.

பிரதிகளுக்கு:

சுவேதாரண்ய ஆச்ரமம், 312, தம்பு செட்டித் தெரு, சென்னை.

தென்றல் காற்று

'பளீர், பளீர்' என்று கன்னத்தில் அறைவிட்டுக் கொண்டிருந்த ஒருவனை 'அடிக்கிருப்போலே இருக்கே' என்று அடிவாங்கினவன் கேட்டதாக ஒரு கதை உண்டு. அப்படிச் சொல்லாமல் "நன்ருகக் கன்னத்தைத் தடவிக்கொடுக்கறியே!" என்று அவன் கேட்டிருந்தால் அடித்தவன் நிச்சயம் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விட்டிருப்பான். "இவ்வளவு அடியையும் சகித்துக்கொண்டு இவ்வளவு சாமர்த்தியமாகப் பேசுகிருனே. இந்த புத்திசாலியையா அடித்தோம்?" என்று யார்தான் அவமானப்படாமல் இருக்க முடியும்?

* * *

"ரோம் - பர்லின்" அச்சில் எங்கேயாவது கோணல் குறுகல் இருக்குமோ என்று எதிர் பார்ப்பவர்கள் ஏமாந்து போவார்கள். அது மாதிரி கேவலமான அபிப்ராயத்தை ஒருவரும் கொள்ளவேண்டாம். என் கொள்கைகள் தெளிவாயிருக்கின்றன. என் தீர்மானத்தை ஒருவரும் அசைக்க முடியாது" என்று முசோலினி பேசியிருக்கிருர்.

"ஐரோப்பிய ராஜீயத்தில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளை ஒரேயடியாகத் தீர்க்கவேண்டியதுதான். அவைகளை வெகு நாளைக்குத் தள்ளிப் போட்டுக்கொண்டு போவதைவிட இப்போதே நேரடியாகத் தீர்த்துவிடலாம்" என்று யுத்த முரசு கொட்டுகிருர்.

* * *

இப்படி முஸோலினி சண்டைக்குக் கூப்பிடும்போது லண்டன் ராஜ தந்திரிகள் என்ன சொல்லுகிருர்களென்று ராய்ட்டர் தெரிவிக்கிறது. "டியூஸ் நிதானமாகவும் சமாதானமாகவும் பேசியிருக்கிருர். நிலைமை மோசமாகப் போய்விடவில்லை" என்று ராஜ தந்திரிகள் நினைக்கிருர்கள்! "டியூஸ் கோபமாகப் பேசுகிருப்போலே இருக்கே" என்று லண்டன் ராஜ தந்திரிகள் சொல்லியிருந்தால் கூட நாம் கவலைப்படமாட்டோம். ஆனல் முஸோலினி விளாசு விளாசென்று விளாசும்போது இந்த மாதிரி பேசுவதனல்தான் முஸோலினி யைப்பற்றியே நமக்குக் கவலை உண்டாகிறது. "இப்படிப்பட்ட புத்திசாலிகள் இந்த ஜகத்திலே இருக்கிருர்களா? இவர்களைப் போய் கன்ன பின்ன என்று திட்டினேனே என்று கூடிய சீக்கிரம் முஸோலினி 'ஹரி - கிரி' செய்துகொண்டு விடுவார் என்று பயப்படுகிருேம்.

* * *

இந்த சந்தர்ப்பத்தை உண்டாக்குவதற்காகத்தான் இவ்வளவு நாளாய் சேம்பர்லேன் முயன்றுகொண்டிருக்கிருர் என்று கூறத் தேவையில்லை. முஸோலினி பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் புத்திசாலித் தனத்தைக் கண்டு அவமானப்பட்டு பிராணனை விடுவார் என்பது சேம்பர்லேன் எதிர்ப்பார்த்ததுதான். அவர் பிராணனை விட்டதும் ஹிட்லரும் பிராணனை விட்டுவிடுவார். அதற்கப்புறம் 'லபெக்' கென்றுஇதாலியையும் ஜெர்மனியையும் பிடித்துக்கொண்டு விடலாம். பிறகு சமாதானம் உண்டாகி விடும்; இதுதான் சேம்பர்லேன் ராஜதந்திரம்.

* * *

இந்த ராஜ தந்திரம் பலக்காமல் இருக்க வேண்டுமானல், முஸோலினி 'ஹரிகிரி' செய்து கொள்ளக்கூடாது. உண்மையில் அத்தகைய கதி வந்தால் நாம் வருத்தப்படப்போவதில்லை. ஆனல் உலக க்ஷேமத்தை உத்தேசித்தும் சேம்பர்லேன் எண்ணம் நிறைவேருமல் இருக்கும் பொருட்டும் அவர் செத்துப் போகாமல் சந்நியாசம் வாங்கிக்கொண்டு ஸிலோனுக்கு வந்து விடலாமென்று யோசனை கூறுகிருேம். ஏனென்ருல் அபிஸீனிய மாஜி மன்னர் ஸிலோனுக்கு வந்து யோகாப்பியாசம் செய்து, நிஷ்டையிலிருக்கப் போவதாக ஒரு செய்தி கூறுகிறது. ஹெய்லி ஸலாஸி தன் நிஷ்டையால் அப்படியே முஸோலினியைப் பஸ்மீகரம் செய்து தன்

வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளக் கூடுமல்லவா? இப்படிச் செய்யு முன்பாகவே முஸோலினி தாமாக சந்நியாசம் வாங்கிக் கொண்டு ஹெய்லி ஸலாஸியிடம் சரண் புகுந்து விடலாம்.

* * *

உண்மையாகவே முஸோலினி நம் யோசனையை ஏற்றுக்கொண்டுவிட்டால் ஹிட்லரும் பரிதாபங் கொண்டு தாமும் சன்னியாசம் கொண்டு விடுவார். "ஓஹோ! அவர்கள் யோகத்தினலே நம்மை எரித்து விடப்போகிருர்கள்" என்று பயந்து கொண்டு சேம்பர்லேனும் டலாடியரும் கூட விலோனுக்கு வந்து சன்னியாசிகளாக ஆவார்கள்.

* * *

இப்படியாக இவர்கள் சன்னியாசிகளானல் அவர்களுக்கும் சமாதானம் உண்டு; உலகத்திற்கும் சமாதானம். இந்த சமாதானத்தை உண்டாக்க அஸ்திவாரம்போட்ட அபிஸீனியச் சக்கரவர்த்தியை நாம் பாராட்டுகிறோம்.

* * *

'ஹரி-கிரி' என்ற வார்த்தை அடிக்கடி அடிபடுகிறதே, அதற்கு என்ன அர்த்தம் என்று பலதடவை நாம் கலங்கியதுண்டு. மகாத்மா காந்தியும் ஜவஹரும் அடிக்கடி உபயோகிக்கிருர்கள். சுபாஷ்கூட தமது கடிதத்தில் அந்த வார்த்தையை வெடிகுண்டுபோல் தூக்கிப்போட்டிருக்கிருர். சமய சந்தர்ப்பத்தை உத்தேசித்து அந்த வார்த்தைக்கு அர்த்தம் 'தற்கொலே' அல்லது அதன் சம்பந்தப்பட்ட வேலே என்பதாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைக்கும்படியிருந்தது. மேலும், அந்த வார்த்தை ஜப்பானிய பாஷையிலிருந்து வந்தது என்று ஓர் பண்டிதர் வியாக்ஞானம் செய்யவே அதை நாம் ஒப்புக் கொள்ளாமல் இருக்கமுடியுமா?

* * *

இந்த 'ஹரி கிரியை' (வார்த்தையைத் தான்!) நாம் உபயோகிக்க வேண்டுமென்று தவித்துக் கொண்டிருந்த வேளேயில் உதவியதற்காக லண்டன் ராஜதந்திரிகளின் தந்திரத்தில் இந்த சமயத்தில் நமக்கு அளவிலாத அன்பு உண்டாகிறது.

* * *

ஒரு பாம்பு மூன்று மாதகாலமாக உண்ணு விரதமிருப்பதாக உதக மண்டலத்திலிருந்து ஓர் செய்தி வருகிறது. அதற்குப் பெயர் 'ஜானி'யாம்! அதை ஒரு வியன்ன டாக்டர் வளர்த்து வருகிருர் 'ஜானி' உண்ணு விரதம் இருப்பதன் காரணத்தை அந்த டாக்டர் கூறவில்லே. அந்தப் பாம்புக்கு கட்டாய ஹிந்தி சொல்லிக்கொடுக்க முயன்ருரா என்று டாக்டரைக் கேட்கிறோம்.

* * *

இதாலி அல்பேனியாவைப் பிடித்ததைக் கண்டித்து அல்பேனிய மாஜி மன்னர் சர்வதேச சங்கத்துக்கு அறிக்கை விடுத்திருக்கிருர். உடனே அடுத்த நிமிஷம் சர்வதேச சங்கம் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி இதாலி மேல் ஒரு தாவு தாவி அல்பேனியாவை மீட்டுக் கொடுக்கும் என்று உலகம் திறந்தகண்ணே மூடாமலும், மூடின கண்ணேத் திறக்காமலும், எதிர்பார்க்கிறது.

* * *

"பிரிட்டனுக்கு இறுதிக் கடிதம் கொடுத்தால் பிரிட்டனில் ஒரு நாய் கூடக் குலேக்காது" என்று ஸ்ரீ. சத்தியமூர்த்தி சமீபத்தில் ஒரு போடு போட்டார்.

பிரிட்டனிலுள்ள நாய்களுக்குக் குலேக்கத் தெரியாதென்றும் ஆனல் கடிக்குமென்றும் சுபாஷ் ஓர் அறிக்கை வெளியிடுவார்.

* * *

திருச்சியில் ரேடியோ ஸ்டேஷன் சென்ற 16-ந்தேதி மங்களமாகத்திறக்கப்பட்டது. உடனே விசாகப்பட்டணத்தில் ஓர் ரேடியோ ஸ்டேஷன் திறக்க வேண்டுமென்று ஸ்ரீ ராமதாஸ் பந்துலு ஓர் இயக்கத்தைக் கிளப்பலாம்! அப்போது சென்னே ஸ்டேஷனே தங்களுக்குக் கொடுக்கும்படி தமிழர்கள் கேட்க, ஆந்திரர்களும் கேட்க, சென்னே ஸ்டேஷன் திருசங்குவுக்குச் சொந்தமாகுமென்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெளிவாக ஒருவர் தீர்ப்புக் கூறுவார்.

உலகப் போக்கு

ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் இன்னும் ஒப்பந்தம் ஏற்படாவிட்டாலும் இரண்டு தேசங்களுக்கும் மத்தியில் பேச்சு வார்த்தைகள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன. நடுவில் பிரிட்டனுக்கு ரஷ்யாவின் மீது கொஞ்சம் சந்தேகம் தோன்ற, உடனே ரஷ்யாவும் பிரிட்டனின் 'நல்ல எண்ணத்தைச்' சந்தேகிக்க, இப்படியாக ஒப்பந்தப் பேச்சு நடப்பதைப் பார்க்கும்போது "ஒரு வேளை ஒப்பந்தமே உண்டாகாதோ!" என்று நமக்கே சந்தேகம் உண்டாகிறது. ஆனால் நிச்சயம் ஒப்பந்தம் நடந்தே தீருமென்று ராஜதந்திரிகள் சொல்வதால் நாம் ஒன்றும் சந்தேகப் படவேண்டியதில்லை!

அடுத்தாற்போல, இன்னொரு ஒப்பந்தம் எவ்வளவு 'சட்புட்' டென்று எழுதிக் கையெழுத்தாகி யிருக்கிறதென்று பார்த்தால் சம்பந்தப்பட்ட நபர்களின் சுறுசுறுப்பை நாம் பாராட்டவேண்டியவர்களாகிறோம். ஆங்கில-துருக்கி ஒப்பந்தத்தால் இரண்டு தேசங்களும் யுத்தகாலத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்யத் தயாராக இருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தைக் கண்டு பிரான்ஸ் குதூகலப்படும்போது ஜெர்மனியும் இதாலியும் ஒருபக்கம் துக்கத்தையும் மற்றொரு பக்கம் கோபத்தையும் அடைகின்றன.

இப்படியாக சர்வாதிகாரிகள் சிரமப்படும்போது அவர்களது செல்லக் குழந்தையான பிராங்கோ மாட்ரிடில் வெற்றி விழாக் கொண்டாடிச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் பிராங்கோவின் ஆட்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்களென்றால், வெகு சுறுசுறுப்பாகக் கடப்பாறையைக் கையிலேந்தி ஆழமாகக் குழிதோண்டிக் கொண்டிருக்கிறார்கள். பிராங்கோவுக்கு ஆபத்து உண்டாக்குவதற்காக அவர்கள் குழி தோண்டவில்லை. வரப்போகும் யுத்தத்தில் மறைந்து சண்டைப் போடுவதற்காகத் தான்.

கிழக்கே சீன-ஜப்பான் யுத்தம் திவ்யமாய் நடந்து கொண்டிருக்கிறது. 21 ஆகாய விமானங்கள் சங்கிங் என்ற சைன நகரின் மேல் குண்டு போட்டதாக அறிகிறோம். இதனால் பெருத்த சேதமேற்பட்டது.

டான்ஜிக் பிரச்னையால் உலகத்தில் எந்த நிமிஷமும் போர் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கும் வேளையில் டான்ஸிக்கில் காலித்தனம் நடக்கிறது. போலிஷ் காபிஹோட்டல்கள் மீதும் பத்திரிகைக் காரியாலயங்கள் மீதும் நாஸிகள் கல்லை விட்டெறிந்து தங்கள் உத்சாகத்தைக் காண்பிப்பதைப் பார்க்கும்போது தமிழ் நாட்டில் உள்ள ஒரு இயக்கம் ஞாபகத்திற்கு வருகிறது.

தென்னாப்பிரிக்காவில் நிறைவேறிய ஆசியக்காரர் சட்டத்தை மகாத்மா கண்டித்திருக்கிறார். யூனியன் சர்க்கார் முன்னர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று கூறுகிறார். சர்க்கார் தவறை உணர்ந்து திருத்திக்கொள்வார்களென்று காந்திஜி நம்புகிறார்.

ஐக்கிய மாகாணத்தில் ஷியா-ஸுன்னி வேற்றுமை இன்னும் தீர்ந்தபாடில்லை. காங்கிரஸ் மந்திரிசபை ஒற்றுமை உண்டாக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்தபோதிலும் ஷியாக்கள் கிழக்கே பார்த்தால் ஸுன்னிகள் மேற்கே பார்க்கிறதாயிருக்கிறது. ஷியாக்கள் கோபம் திடீரென்று மந்திரிசபை மீது இப்போது திரும்பியிருக்கிறது. மந்திரிசபை ஒற்றுமை உண்டாக்கத் தவறிவிட்டதென்றும் ஷியாக்கள் உரிமையைப் பாதுகாக்கவில்லையென்றும் அவர்கள் புகார் கூறுகிறார்கள். இனிமேல் பிரதமமந்திரி வீட்டுக்கு முன்னால் அவர்கள் சத்யாக்ரஹம் செய்வார்கள் என்பதைக் கேட்கும்போது தமிழ் நாட்டிலுள்ள ஓர் இயக்கம் ஞாபகத்திற்கு வருகிறது.

ராஜகோட் சென்ற மகாத்மா வீரவாலாவுடனும் நிதானக்கட்சித் தலைவருடனும் பேச்சு வார்த்தை நடத்திவருகிறார். கௌரவமான ஓர் ஒப்பந்தத்திற்குத் தயாராக இருப்பதாக காந்திஜி கூறுகிறார்.

சமஸ்தானப் பிரச்னைகள் உரிமைகளை அளித்துவிடும் படியும் சுதந்தரக் கோரிக்கையை நிராகரிக்க முடியாதென்றும் சர்தார் வல்லபாய் படேல் பவநகரில் சமஸ்தான மன்னர்களுக்கு யோசனை கூறினார்.

ஹைதராபாத்தில் சத்யாக்கிரஹம் வரவர பலமடைந்து வருகிறது. பிரதிதினமும் ஷோலாப்பூரிலிருந்து நூற்றுக் கணக்கில் வரும் சத்யாக்கிரஹிகளை போலீஸார் சிறையிலடைத்து வருகிறார்கள். ஹைதராபாத் நிலைமையை ஸ்ரீ. ஜி. டி. குப்தா மகாத்மாவுக்கு விளக்கிக் கூறினார்.

சென்னை சட்டசபையில் விற்பனை வரி மசோதா மங்களகரமாக நிறைவேறிற்று. எதிர்கட்சி அங்கத்தினர்கள் சாமர்த்தியமாக வெளியே எழுந்துபோயுங்கூட விற்பனைவரி என்னமோ எங்கேயும் போகாமல் சட்டமாக ஆயிற்று.

புத்தக விமர்சனம்

'இளைஞன் கனவு' [ஸ்ரீ சுபாஷ் போஸ்] மொழி பெயர்த்தவர் ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி பி. ஏ. அல்லையன்ஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை. பக்கங்கள் 248. விலை. 1-4-0

சுபாஷின் 'அன்னையின் அழைப்பாக' தன் வங்கச் சகோதரர் களைத் தட்டி எழுப்பும் உருக்கமிகுந்த உபதேசத்தைப் படிக்கும் ஒவ்வொரு வருக்கும் இரத்தம் கொதிப்படையாமலிருக்க முடியாது. மனிதனுடைய வாழ்க்கையையும் தேசிய வாழ்க்கையையும் ஒப்பிட்டுக் காட்டி "சில முக்கியமான வார்த்தைகள்" கூறும் அத்தியாயம் அவருடைய எல்லையற்ற அறிவு விசாலத்தையே காட்டுகிறது.

அதன்பின் அவர் மாந்தாலாய் சிறைவாசம் அநுபவித்த காலத்தில் கல்கத்தாவிலுள்ள தன் நண்பர்களுக்கும், உறவினருக்குமாக வரைந்த 14 நீண்ட கடிதங்களிருக்கின்றன. பண்டிட் ஜவஹர் தன் குமாரிக்கு எழுதியுள்ள கடிதங்களைப் போலவே இவைகளும் பல போதனைகளடங்கியவைகளாயிருக்கின்றன. இக் கடிதங்களின் வாயிலாகத்தான், தன் தாய் நாட்டின் விடுதலையைப்பற்றிக் காணும் கனவுகளைச் சித்தரிக்கிறார்.

ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி மொழி பெயர்த்துள்ள பல புத்தகங்களையும் படித்திருப்பவர்களுக்கு இம்மொழி பெயர்ப்பைப்பற்றிக் கூறுவது, அவர் மதிப்பைக் குறைப்பதாகும் என்றே நினைத்து விடுக்கிறேன்.

சுமார் 250 பக்கங்களடங்கிய இப் பதிப்பு சேர்த்தியான காகிதத்தில் வெகு அழகாகப் பயிண்டு செய்யப்பட்டிருப்பதுடன், முகப்பில் சுபாஷ் பாபுவின் படத்தோடும் விளங்குகிறது. இவ்வளவு உயர்ந்த பதிப்பிற்கு ஏற்பட்டிருக்கும் விலை மிகக்குறைவென்றே சொல்ல வேண்டும்.

ரா. ஆறுமுகம்.

விஜயா (ஸ்ரீசரத் சந்திர சட்டர்ஜி எழுதியது. மொழி பெயர்ப்பு: எஸ். குருஸ்வாமி பி. ஏ., பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 1-8-0)

சரத்சந்திரர் வங்காளியில் எழுதிய விஜயா என்ற இந்த அழகிய நாவலை ஸ்ரீ எஸ். குருஸ்வாமி இனிய தமிழ் நடையில் மொழி பெயர்த்திருக்கிறார். வங்காளி இலக்கியத்தில் சரத்சந்திரர் ஒரு புரட்சியை உண்டாக்கினதலலாமல் ஒரு சமூகப் புரட்சிக்கேற்ற அஸ்திவாரம் உண்டாக்கினார். புதுப்புதுக் கொள்கைகளையும் திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு அவர் கலைக்கோயில் எழுப்பினார். அவரது நாவல்கள் வெறும் கதைகள் மட்டுமல்ல; அவை மனித சமூகத்துக்குக் கூறப்பட்ட யோசனைகள், தத்துவங்கள்.

விஜயா பெண் விடுதலையைப்பற்றிய ஓர் புஸ்தகம். மூலத்தின் தாத்பர்யமும் இனிமையும் அப்படியே தமிழில் அமைந்திருப்பது சந்தோஷிக்கத்தக்க விஷயம். பெண்கள் இயக்கம் பரவிவரும் இக்காலத்தில் இப்புஸ்தகம் பெண்மணிகள் கவனத்தைக் கவர்வதில் ஆச்சரியமில்லை. ஆனால் நமது ஆண்மக்களும் இப்புத்தகத்தை ஒரு தடவை படித்து சந்தோஷமோ அல்லது துக்கமோ படும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சூறாவளி

ஆசிரியர்: க. நா. சுப்பிரமணியம்,
துணை ஆசிரியர்: கி. ரா.
(187, மவுண்ட் ரோடு, சென்னை.)

சூறாவளி பத்திரிகை உலகில் ஒரு புதிய பிறப்பு—ஒரு முறையில் உண்மையிலேயே எல்லா அம்சங்களிலும் புதியது என்று சொல்லலாம்.

முதலில் சூறாவளியின் பதிப்பே மிகவும் அழகாக இருக்கிறது. இது வரையில் தமிழ் வாரப் பத்திரிகை இவ்வளவு நவீன முறையில் வெளிவந்ததில்லை. விஷயங்கள் வெளிவரும் மாதிரியும் வசீகரமாகவே இருக்கிறது.

ச. து. சு. யோகி, புதுமைப் பித்தன், பி. எஸ். ராமையா, சிதம்பர சுப்ரமணியன், கி. ரா., க. நா. சுப்ரமணியன்,—இன்னும் பல 'இளம் எழுத்தாளர்கள்' எழுதுகிறார்கள்.

பத்திரிகையை இவ்வளவு உன்னத முறையில் நடத்தும் ஆசிரியர்களை நாம் மிகவும் போற்றுகிறோம்.

இதுவரையில் வெளிவந்துள்ள நான்கு வார வெளியீடுகளிலிருந்து பத்திரிகை நிச்சயம் வெற்றிபெறும் என்று சொல்லி விடலாம்.

சிறு கதை

ஜடாதரன் கல்யாணம்

(ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி)

பொழுது புலரும் நேரம். ஒரு ஆழ்ந்த அமைதி ஆகாசத்தையும் பூமியையும் அளாவியிருந்தது. வயல் வெளிகளின் மீதும் காக்கழனி கிராமத்தின் தாழ்ந்த ஓட்டுவில்லை வீடுகளின்மீதும் சுக்கிரன் உதயமாகி வானவளைவில் ஒரு மெல்லிய ஒளியைப் பரப்பினான். காலையின் பிரகாசம் ஆகாயத்தில் சிந்திய பால்போலப் பரவிக்கொண்டிருந்தது மெள்ள.

ஒரே ஒரு பிராணிக்குத்தான் இரவு பூராவும் தூக்கம் கிடையாது. சுக்கிரோதயத்துக்கு முன்பே எழுந்து சேஷி திண்ணையையும் மண் தரையையும் சாணமிட்டு மெழுகினாள். சமமாயிருந்த அந்தத் தரை பளபளவென்று பளிங்கு போல் பிரகாசித்தது. அதில் பலவகையான அழகான கோலங்கள் போட்டாள் சேஷி. நன்றாக சூரியோதய மானதும் எறும்புகள் சாரிசாரியாகக் கிளம்பி அரிசி மாத்தூள்களை ஒவ்வொன்றும் ஒன்றாக எடுத்துக் கொண்டு போக ஆரம்பித்தன.

ஆனால் எறும்புகள் தங்கள் வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பே சேஷி தன் வேலையை முடித்து விட்டாள். தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆனந்தத்தில் மெய் மறந்து சஞ்சரித்தாள். அன்று பொழுது விடியும் நேரம் அவளுக்கு ஒரு புனிதமான பொழுது. அவள் தன் மகன் ஜடாதரனை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் கிறிஸ்மஸ் விடு முறைக்கு ஊருக்கு வந்து கொண்டிருந்தான்.

ஆனால் அடுத்தவீட்டு விசாலாட்சிக்கு உலகத்தில் ஒன்றும் பிடிக்கவில்லை. தூக்கமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். சேஷி பாத்திரம் தேய்த்த மெல்லிய சத்தத்தால் அவள் தூக்கம் வேறு கலைந்து விட்டது. எல்லா சுகவாசிப் பெண்களைப் போலவே அவள் அதி காலையில் தான் அதிகமாகத் தூங்குவது வழக்கம்.

சேஷியை மனதில் சபித்துக்கொண்டே எழுந்து வந்து விசாலாட்சி கோபத்தைக் காட்டாமல் "ஏண்டி சேஷி — இதென்ன இது — பிசாசு மாதிரி பாதி ராத்திரியில் காரியம் செய்கிறாய்?" என்றாள். அவள் குரலிலேயே குத்தல் பூராவும் இருந்தது. "இன்றைக்கு என்ன கலியாணமா உன் வீட்டில்?" என்று மேலும் கிண்டலாகக் கேட்டாள்.

விசாலாட்சியின் புருஷன் ஒரு புரோகிதன். பாவம், மாதத்தில் இருபத்தைந்து நாள் வெளியே போய் சுற்றுப் பக்கம் பத்து மைல் அலைந்து நாலு காசு கொண்டு வந்தான். ஆனால் அவன் மிகவும் சரஸி; சுரத்தான வாலிபன். சாஸ்திரங்களும் தெரியும், உலகமும் தெரியும். தலையணை மந்திரோபதேசம் என்பார்களே, அதை சரியாகக்கேட்டு பயன் பெறவும் யோக்கியதை உண்டு அவனுக்கு. 'பெரிய மனிதர்களை' கலப்பின்றி ஸ்தோத்திரம் செய்யவும் தெரியும்; தனது வித்வத்திலோ அழுத்தமான மந்திரோச்சாடனத்திலோ தனது மனைவி மோகித்துப்போய் விடவில்லையென்றும், தான் அரித்துக்கொண்டு வரும் பணத்தில்தான் அவள் கண் என்பதும் அவனுக்குத் தெரியும்.

விசாலாட்சி நல்ல நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். கலியாண விஷயங்களிலேயே, சாதாரணமாக ஏற்படும் எதிர்பாராத அதிர்ஷ்டப்படி அவள் சமஸ்கிருத பண்டிதனாக வேண்டியவனுக்கு வாக்கப்பட்டாள். ஆனால் அவன் புரோகிதனானான். அவன் சாமார்த்தியம், வரும்படி நிச்சயமற்ற அந்தத் தொழிலில்கூட அவன் ஓரளவு,வெற்றி பெற்று விட்டான். அதற்கு அடையாளம் அவன் சமீபத்தில் வாங்கின ஒரு ஏக்கர் முதல் தரமான நஞ்சைதான். விசாலாட்சிக்குக் கவலை கிடையாது; வேலை கிடையாது. ஆகையால் வம்பளப்பு என்னும் நற்கலையை அவள் நன்றாக அபிவி

ருத்தி செய்ய சாவகாசமிருந்தது. அதன் மெருகை ஏற்றி ஏற்றிப் பேசுகிறதில் குத்தல் என்ற குன்றத்துச் சரிவிலேதான் அவள் சதா விளையாடினாள்.

சேஷி என்ன செய்வாள் பாவம்! பக்கத்து அகத்துக்காரியின் ராங்கியைப் பொறுத்துக்கொண்டு தான் இருந்தாள். சில சமயங்களில் "அந்த நாளில்" தானிருந்திருக்கக்கூடிய வைபவங்களைப்பற்றிக்கூட எண்ணுவாள். அவள் கணவன், ஏழையானாலும், கிராமத்தில் செல்வாக்கு பெற்றவன், போக்கிரி, மாட்டுத்தரகன்,—இன்னும் பல விஷயங்களில் கைதேர்ந்தவன். ஆனால் நல்ல வயதில் பாம்பு கடித்து இறந்தான். மகா துடுக்கு, வாயும் கையுமாக நிமிஷம் கலகம் பண்ணி விடுவான். அதிலிருந்து தன் குடும்பத்துக்கு சம்பாத்தியம் செய்து கொள்வான். எனவே சேஷி தானே பாடுபட்டு ஜீவனம் செய்ய வேண்டியதாயிற்று. ஆனால் அவளுக்கு ஒரு பெருமை, அவள் பையன் பி. ஏ. இரண்டாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவன் தகப்பனார் இறந்த பொழுது அவனுக்கு வயது ஏழுதான்; பரம சாது—தகப்பனுக்கு நேர் விரோதமாக இருந்தது குழந்தையின் குணம்.

விசாலாட்சி கேட்ட கேள்விக்கு பதில் ஒன்றும் சொல்லாமல் சேஷி தன் வேலையைக் கவனித்தாள். தேள் போலே விசாலியின் நாக்கு கொட்டுகிற நாக்கு என்று அவளுக்குத் தெரியும். ஆகையால் அவள் அதை லட்சியம் செய்யாமல் தன் மகன் ஞாபகமாகவே இருந்தாள்.

"சேஷி, திண்ணையைப் பார்த்தாலே ஜடாதரனுக்குக் கலியாணம்னு சொல்லலாம்போலே இருக்கே!" என்று இன்னும் கிண்டலாகப் பேசினாள் விசாலாட்சி.

"உன் வாக்கு முகூர்த்தம் ஆகட்டுமே! வேடிக்கையாகக் கேலி பேசுவது கூட சில சமயம் நிஜமாய்ப்போகிறது. என்னம்மோம்மா, நான் உன்னைப் போல என்ன பணக்காரியா? உனக்கென்ன உன் ஆத்துக் காரர் மாஸத்துலே இருபத்தஞ்சு நாள் வெளிலே போய்—"

"போதும். ஏதுக்கு வேஷம் போடறே? இந்தவூரிலே யார் பி. ஏ. கிளாசு வரையிலும் வந்திருக்கா. உனக்குப் பெருமை. வக்கில் கிட்டேயும் கலெட்டர் கிட்டேயும் இருந்து தினம் ஒரு ஜாதகம் வரது. நீ வரதக்ஷிணையை ஏத்திக்கிண்டே இருக்கே."

"அப்படி யெல்லாம் ஒண்ணுமில்லேடி! ஜாதகம் வரது இல்லேங்கல்லே. கஷ்டப்பட்டுப் படிக்கிறான் குழந்தே. கிளாசிலே கூட அவன்தான் மொதலாம். வாத்தியாரெல்லாம்கூட அவன்மேலே உசிராம்."

"ஆமாம்—என்னமாடி அவனுக்கு செலவுக்கு சமாளிக்கறே? சாப்பாடு சம்பளம்—கும்பகோண பட்டணத்துலே செலவு கொஞ்சமாவா ஆகும்?"

"ராவும் பகலு மாத்தான் ஒழைக்கிறேனேடி! இந்த இரண்டு எருமை மாடும் பசுவும்தான் எங்களைக் காப்பாத்தரதுகள். பால் வித்து, தயிர் வித்து, நெய் வித்து தம்பிடி தம்பிடியாச் சேத்து முழுசா பத்து ரூபாயாக் கண்ணாலேபாத்து மணியாடர் அனுப்பறேன். அவனுக்கு சம்பளம் இல்லியோன்னோ — இனாம் பண்ணியிருக்கா—எப்படியோ நடக்கிறது. பதனஞ்சு வருஷமா நான் மாட்டுக்கொட்டில்லேயும் கொல்லையிலேயும் மடிஞ்சதும் எங் கொழந்தை ஊரார் விளக்கண்டே புஸ்தகங்களோடே பாடுபட்டதும் ஒரு தினுசா இன்னும் மூணு மாதத்திலே முடியும்."

இதைச் சொன்னபொழுது சேஷி முகத்தில் பெற்றவளே அறியக்கூடிய ஒரு பெரு மகிழ்ச்சி தோன்றிற்று.

"வாஸ்தவம்தாண்டி! ஓம் புள்ளே பொறக்காத புள்ளே தான். பாவம் அம்மைவடு இல்லாவிட்டா இத்தனை நாளைக்கு கலியாணம்கூட ஆயிருக்கும்."

ஒரு நிமிஷம் சேஷியின் முகம் கோபத்தால் சிவந்தது. ஆனால் மறுநிமிஷம் அவள் சாந்தமாக "என்னமோ! மகமாயி தாயார் கிருபை பண்ணிக் குழந்தைக்கு உசிரு கொடுத்தாளே! கண்ணைக் கொடுத்தாளே! எங்கப்பா சொன்னது மட்டும் பொய்யாப் போகலே, அவன் பொறந்தன்னிக்கே ஜாதகம் கணிச்சி சொல்லிப் புட்டார். 21 நாள் மகமாயி வீட்டுலே விளையாடுவான்னு சொன்னார். எங்க அம்மாகுட்டிக்குக் கோவம் வந்துடுத்து. 'ஓடிப்போய்

அவர் 'கையிலேருந்த ஓலேச்சுவடியைப் பிடுங்கி எறிஞ்சிப்புட்டாள்."

"இன்னும் என்ன சொன்னர்? ரொம்ப நன்ன ஜோசியம் சொல்லுவராமே! உன் பிள்ளைக்கு எப்போ கல்யாணம் ஆகும் னர்?"

"அதெல்லாம் அப்பொ எனக்கொண்ணும் காதிலே படலலே, என்னமோ உளறிண்டு இருந்தார். எனக்கு—வெக்கமென்ன சொல்றேனே—தலேகால் தெரியல்லே. பாவம் உனக்கு எப்படித் தெரியும் அதெல்லாம்? அனுபவம் ஏற்படல்லே. வெங்கடாஜலபதி கண் திறந்து பார்த்து உன் வயிறு திறக்கட்டும்டி அம்மா."

சேஷி விசாலாட்சியின் உள்ளத்தில் ஆழ்ந்திருந்த ஒரு ஆசையைத் தூண்டினள்—கொஞ்சம் வேண்டுமென்றுதான். அந்த உணர்ச்சி வழிந்து ஓடி அவளே மெய் சிலிர்க்கச் செய்தது. தன் குழந்தை என்ற பேரானந்த உருவத்தை நினைந்து ஏங்கினள் அவள். அந்தக் குறை அவள் வாழ்க்கையில் ஒரு சூன்யத்தை ஏற்படுத்தித் துன்பம் கொடுத்தது. அவள் புரோகிதக் கணவன் வெயிலிலும் மழையிலும் நடந்து எங்கெங்கோ தெருத் திண்ணைகளிலெல்லாம் படுத்துத் தூங்கினபொழுதெல்லாம் வீட்டில் விசாலாட்சியை இந்த ஒரு ஏக்கம்தான் துளைத்தது. யாராரையோ அவன் 'புத்ரபௌத்ராபி விருத்திரஸ்து,' என்று வாழ்த்தினன்; ஏதோவொரு நாலணு எட்டணு காசுக்கும் காப்கறி இலேக்கும்!

அதனல்தான் கணவன் எங்கெங்கோ அலேந்துவிட்டு 'அப்பா' என்று இரவில் வீட்டுக்கு வந்தபோதிலும் விசாலாட்சி அவன் மேல் எரிந்து விழுந்தாள். குழந்தையில்லாத குறை பெண்களுக்குப் பெரிய குறையல்லவா? மணவாழ்க்கையிலேயே அவர்களுக்கு அதனல் ஆத்திரம் ஏற்படுகிறது. சேஷியின் ஆசிர்வாதம் நோய் பட்ட அவள் உள்ளத்துக்கு ஒரு ஆறுதலாக இருந்தது.

"ஈசுவரன் கண் திறந்து பார்ப்பனே? ...ஏண்டி, ஜடாதாவுக்கு எப்போ கலியாணம்? என் தங்கையை அவனுக்கு வாங்கிக்கொள்வயோ? வேடிக்கையில்லே! ஜயா சமத்தடி! கண்ணுக்கு நன்ன இருப்ப—நீதான் பார்த்திருக்கயே" என்ருள். உள்ளூர விசாலாட்சிக்கு சேஷியிடத்தில் எவ்வளவு வெறுப்போ அவ்வளவு பிரியம் ஜடாதரன் மேல்.

"என்னமோ முடிச்சுப்போட்டிருந்து ஜாதகம் பொருந்தின நடக்கிறது!"

"அதெல்லாம் நாம் பண்ணிக்கிறது தானேடி! இரண்டாயிர ரூபாய் தரேன். ஜயாகூட இன்னிக்கி இங்கே வரா."

விசாலாட்சி காக்கழினிக்கு வந்து ஏழு வருஷங்கள் ஆயிருந்தன. அவளே ஜடாதரனிடம் ஒரு பற்றுக் கொண்டிருந்தாள். தான் பெருத இன்பத்தை தன் தங்கையாவது பெறட்டுமே என்று எண்ணினள் அவள்.

"ஜயா வருகிருளா? தங்கமாய்ப்போச்சு. ஜடாதரன்கூட இதோ வந்துடுவன், அரை மணியில்."

"ஜடாதரன் இன்னிக்கா வருன்? இதென்னடி ஆச்சரியம்! இதே நல்ல பொருத்தம் தான்" என்ருள் விசாலாட்சி சந்தோஷத்துடன்.

"வண்டி மங்கநல்லூருக்கு ஆறு மணிக்கு வருகிறது. குறுக்குப் பாதையில் வயலேத் தாண்டிக்கொண்டு வந்து கொண்டிருப்பான். அதுக்குத்தான் சட்டுனு மொழுகிக் கோலம் போட்டிருக்கேன். இட்டிலி காப்பிகூட தயாராக வச்சிருக்கேன்"

"எல்லாம் நன்ன அமஞ்சிருக்கே! உன் பிள்ளைக்குக் கலியாணமான்னு சித்தெ முன்னே கேட்டேனே இல்லேயோ, நிசமாத்தான் ஆகப்போரது! இன்னிக்கே நிச்சயம் பண்ணிவிடு. தெய்வ பலம் இருக்காப்போலே இருக்கு. அடுத்த மாஸம் கல்யாணம் நடத்திப்பிடரேன். பொருத்தமான கல்யாணம். நாம்பாட்டிற்கு ஏதாவது கேலியாகப் பேசறத்திலேகூட தெய்வ சம்மதம் இருக்கு பாரு!"

"ஈசுவர சம்மதமான எனக்கும் பரம சந்தோஷம்!"

சேஷி உள்ள மகிழ்ச்சியுடன் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். இரண்டாயிரம் ரூபாய் ஒரு சொத்தாயிற்றே! ஜடாதரனுக்கு இனிமேல் கவலேயில்லே. சம்பந்திகளோ நல்ல வம்சம். ஊருக்கே சம்பந்திதான் முக்கியஸ்தர்.

இருவரும் அதற்குமேல் பேசவில்லை. அவர்கள் எண்ணங்கள் உள்ளூர மேல் மேல் ஓடின. ஆனால் இருவரும் வாசலில் தலையை நீட்டி நீட்டி வழியைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். விசாலாட்சிகூட ஜடாதரனைப் பார்க்க ஆவலுள்ளவளாக இருந்தாள். அம்மைவடுவு முகமானாலும் ஜடாதரன் நல்ல அழகு. நிமிர்ந்த நடையும் இங்கிதமும், முகதேஜஸுமாக விளங்கினான். அவன் குரலிலேயே ஒரு தெய்வீக இன்பம் இருந்தது. அவன் கண்கள் இரண்டு அமைதி ஊற்றுக்கள். அவற்றின் ஆழத்தில் விசாலத்தின் உள்ளம் வாழ்க்கையின் தொல்லையை மறந்து சிறிது ஆறுதல் கொள்வதுபோல மூழ்கும்.

(தொடரும்)

திருநீலகண்ட நாயனாரில் ஓர் காட்சி

சரித்திரக் கதை

சமூகத் தியாகி

(ஸ்ரீ டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி)

ரோமானிய சாம்ராஜ்யத்தின் கீர்த்திக் கதிரவன் உச்சியிலிருந்து இறங்கிவிட்டான். ஆனால் இன்னும் மலைவாயில் விழுந்துவிடவில்லை. அவனுடைய ஒளி கண்ணைப் பறித்துக்கொண்டு போவதாயிருந்தபோதிலும், முன்னிருந்த அவனுடைய கிரணங்களின் உஷ்ணம் நிச்சயமாகக் குறைந்து கொண்டுதான் வந்தது.

எதற்கும் ஆயுட்காலம் இவ்வளவுதான் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதல்லவா? காலவிதிப்படி ரோம ராஜ்யமும் க்ஷீணதசையை அடைய ஆரம்பித்தது. தற்போதைய ரோமானியர்கள் வீரத்தையும் பராக்கிரமத்தையும் சௌரியத்தையும் பாட்டுகளில் கேட்டு மகிழ்ந்தார்கள். தங்கள் கைகளால் செய்து கண்டாரில்லை. சத்தியத்தையும் பக்தியையும் அன்பையும் புராணங்களிலும் சிலாசாஸனங்களிலும் கண்டானந்தித்தார்களே யொழிய வாழ்க்கையின் நடைமுறையில் எந்த உத்தமமான கொள்கைகளையும் கைப்பிடிக்கவில்லை. உழைப்புத் தேவதையின் கோயிலைத் தகர்த்தெறிந்துவிட்டு அங்கு கேளீ விலாசத்தைக்கட்டி மதுவையும் மாதரையும் அதில் பிரதிஷ்டைசெய்து மமதையைப் பிரஸாதமாக அடைந்தார்கள். மனம் போனவாறெல்லாம் இப்படித் தடுமாறிக்கொண்டிருந்தார்கள் ரோமானியர்கள்.

*　　*　　*

மேற்கண்ட நிலைமையிலிருந்தது ரோமாபுரி. கதை ஆரம்பிக்கும் சமயம் விடியற்காலை மூன்றுமணி இருக்கும். கோட்டை வாயிலைக் காத்திருந்த காவலாளிகள் குதிரையின் காலடி சத்தத்தைக்கேட்டு சடக்கென்று விழித்தெழுந்தார்கள். தீவட்டி வெளிச்சத்தில் கண்ணுக் கெட்டின தூரத்தில் காற்றுடன் போட்டிபோட்டுக் கொண்டு பறந்துவரும் குதிரை வீரன் ஒருவனின் உருவம் தெரிந்தது.

"நில் அங்கே! நீயார்?" என்ற காவலாளர்களின் உத்தரவு கூறி முடிக்கப்படுவதற்குள் அவ்வீரன் கோட்டை வாயிலை அணுகிவிட்டான்.

"ரொம்ப அவசரமான சமாசாரம். கதவைத் திறவுங்கள். கோதர்கள் நம் ராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறார்கள். விடிவதற்குள் நகரை முற்றுகையிடுவார்கள்."

கோட்டைக் கதவுகள் அவசர அவசரமாய்த் திறக்கப்பட்டன. அவைகளில் கட்டியிருந்த மணிகளின் சப்தம் வரப்போகும் சண்டையில் ரோமாபுரியின் ஜயத்திற்கு அறிகுறியாக இருக்கவேண்டுமென்று எல்லோரும் கடவுளைப் பிரார்த்தித்தார்கள். கதவுகள் திறக்கப்பட்டவுடனே அந்தக் குதிரைவீரன் நேரே சேனாதிபதியிடம் சென்று செய்தியைச் சொன்னான். மகாராஜாவிடம் சொல்லிப் பயனில்லை. மகாராஜா விவகாரம் தெரியாத ஒரு சிறு பையன்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் குதிரைகளின்மேல் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்த உருவங்கள் அந்த இருட்டில் மங்கலாகத் தெரிந்தன. பொழுது நன்றாய் விடிந்தவுடன் ரோமானியர்களின் சேனை சண்டைக்கு ஆயத்தமாய் விட்டது.

அன்று யுத்தத்திற்குச் சென்ற ரோமானியர்களின் மனப்பான்மை, இவர்களுக்கு முந்தின தலைமுறையில் யுத்தம் செய்யச் சென்றவர்களுடைய மனப்பான்மைக்கு நேர் விரோதமாக இருந்தது. அவர்கள் சண்டைக்குப்போகும் பொழுது சக்தியையும் சாமார்த்தியத்தையும் காண்பித்து தங்கள் புகழ்மாலையில் மற்றொரு வெற்றிப் புஷ்பத்தையும் கோர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் போனார்கள். ஆனால் இவர்கள் தங்கள் மானத்தையும் நகரையும் காப்பாற்றிக்கொண்டால் போதுமென்ற குறுகிய எண்ணத்துடன் சென்றார்கள். அன்றுசண்டையிட்டவர்கள் இந்தமாதிரிச் சண்டையை தங்கள் வாழ்க்கையில் சாதாரணமான ஒரு சம்பவமாக, வெறும் விளை

யர்ட்டாகக் கருதினர்கள். இன்று போனவர்களோ ஏதோ ஒரு அசாதாரணமான பெரும் இக்கட்டிலிருந்து தப்பிக்கொள்ளத் தவித்துக் கொண்டிருப்பவர்களைப் போலச் சென்றுர்கள். எப்படியிருந்தாலும், கோதர்களுடன் மிகவும் தைர்யமாகவும் தீவிரமாகவும் தான் அவர்கள் சண்டை செய்தார்கள். அபாரமான சக்திவாய்ந்தவர்களின் குலத்தில் உதித்தவர்களல்லவா? ஆதலால், அவர்களிடமிருந்த வீரஜ்வாலை முழுவதும் அணைந்து விடவில்லை. ஒரு சிறு பொறியாவது இவர்கள் ஹிருதயத்தில் எஞ்சியிருந்தது. கழிந்துபோன நாட்களின் உயர்வையையும் பெருமையையும் சமயத்தில் நினைவுறுத்திக் கொண்டார்கள் ரோமானியர். அந்தச் சிறு பொறியும் உலகத்தைக் கொளுத்தி விடும்படியான வீராவேசத்தை உண்டாக்கிற்று. சண்டையின் முடிவைப் பற்றிச் சந்தேகமென்ன? கோதர்கள் முறியடிக்கப்பட்டு இடந்தெரியாது ஓடிப்போனர்கள். ஜெய கோஷத்துடன் திரும்பிய வீரர்களின் கத்திகள் வெய்யிலில் பளிச் பளிச்சென்று மின்னியன.

* * *

உலகத்தின் பாழடைந்த கட்டிடங்களுக்குள் முதன்மை ஸ்தானத்தை வகிக்கக்கூடியது ரோம் நகரிலுள்ள கொலீஸியம். இடிந்து கிடக்கும் அந்தப் பிரமாண்டமான கட்டிடம் இன்றும் பார்ப்பவர்களின் மனதில் ஆச்சர்யத்தையும் ஒருவிதமான பயத்தையும்கூட உண்டாக்கத் தக்க வல்லமையுடையதாக இருக்கிறது. வருஷந்தோறும் அதைக் காண எண்ணிறந்த ஜனங்கள் உலகின் எல்லா பாகங்களிலிருந்தும் வருகிறார்கள். ஏனெனில், இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் அதற்கிருந்த மாண்பையும் உன்னதத்தையும் அழகையும் மனக் கண்ணால் அளவிட முடியுமேயன்றி வேறு வழிகிடையாது. "கொலீஸியம் உண்டானல் ரோம் உண்டு, அதுபோன அன்று ரோமும் போச்சு" என்று ஒரு கவி பாடியிருக்கிறார்.

ஒரே சமயத்தில் நாற்பதினயிரம் ஜனங்கள் சுற்றிலும் உட்கார்ந்து நடுவில் கீழே முற்றத்தில் நடக்கும் காட்சிகளைப் பார்க்கும்படி வட்ட வடிவமாய்க் கட்டப்பட்டிருந்தது கொலீஸியம். அடுக்கடுக்காக மேலும் மேலும் போய்க்கொண்டிருந்த அங்குள்ள படிகள் பூமியிலிருந்து ஆகாயித்திற்குப் போவதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஓர் ஏணியின் படிகள் போன்றிருந்தன.

வெளியிலிருந்து பார்ப்பதற்கு ரோமானிய நாகரீகத்தின் சகல நல்ல அம்சங்களும் குடிகொண்டிருப்பதற்கான அரண்மனையாகத் தோன்றியது. ஆனல் உள்ளிருந்ததென்ன? அதே அழிவற்ற நாகரீகத்தில் பதுங்கிக்கிடந்த துர்தேவதைகளெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து அங்கு கேட்பாரின்றித் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. ஆதிமுதல் இன்று வரையிலுள்ள மனிதனின் சரித்திரத்தில் உள்ள மிகவும் அருவருக்கத்தக்க பல செய்கைகளை இந்த இடம் கண்டிருக்கிறது.

ரோமானியர்கள் அங்கு கண்டு களித்த காட்சிகள் தான் என்ன?

உயிரென்பதற்குத் துளிக்கூட மதிப்பில்லாமல் பூதங்களின் பாறுங்கல்லைப் போன்ற ஹிருதயத்தைப் படைத்தவர்களாய் ஒன்றன்பின் ஒன்றாய் ஜீவ ஜந்துக்கள் மடிவதைக்கண்டு மகிழ் வெய்தினர்கள்! வெறும் கோழிச் சண்டை மாட்டுச் சண்டையோடு நின்றதா? மனிதச் சண்டையுங்கூடப் போட்டுப் பார்த்தார்கள்.

எவனாவது ஒரு அடிமையை உள்ளே விட்டு புலியுடனே சிங்கத்துடனே சண்டை செய்யச் சொல்வார்கள். அவன் இறந்தானானல், அதைக் கண்டு களிப்பார்கள். இல்லையேல் இரண்டு அடிமைகளை ஆயுதங்களுடன் உள்ளே விட்டு எவனாவது ஒருவன் மடியும்வரை சண்டைசெய்யக் கட்டளையிடுவார்கள். இப்படியுமா நடக்கும் ஒரு நாகரீகம் முற்றின நாட்டில் என்றிருக்கிறது நமக்கு.

* * *

இந்தக் காட்சிசாலையில் கூடியிருந்தனர் ரோமானியர்கள் அன்றையதினம். கோதர்களைத் தோற்கடித்து விரட்டிய பிறகு, தப்பித்தவறி ஜெயித்து விட்டவர்களுக்கு உண்டாகும் அமோகமான தலைக்கிறுக்கையும் மதத்தையும் அளவிட முடியுமா?

ஆனால் அன்று கொலீஸியத்தில் நடந்த அட்டூழியங்களுக்குச் சாவுமணி யடிக்கப்போவதை அறிந்திருப்பார்களா அவர்கள்? அன்று அங்குள்ள துர்தேவதைகளின் தாண்டவம் அடியோடு நிற்குமென்பதை அவர் அறிந்தனரா? அடக்க முடியாத ஆவேசத்துடனும் கங்குகரையில்லாத் தலைத் தெறிப்புடனும் இந்த மிருகத்தனமான காட்சிகளைக் கண்டுகளிக்கலாமென வந்திருந்தார்கள்.

கொலீஸியத்தின் முற்றத்தில் இரண்டு அடிமைகள் ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டனர்.

அவர்களைக் கண்டதும் ரோமானிய யுவசமூகத்திற்கே பைசாசங்களைப் போன்ற ஆவேசம் உண்டாயிற்று. அவர்களிடை கிளம்பிய ஒரு காட்டுக்கத்தல் கொலீஸியத்தின் கூரையைப் பிளந்து கொண்டு வானைநோக்கிச் சென்றுவிடும் போலிருந்தது. அதைக் கேட்டுத்தான் விண்ணுலகத்தார் இம்மாதிரிச் செய்கைகளை இனிக் கொஞ்சமும் வளர விடக்கூடாதென நினைத்து ஒரு மகானை அனுப்பினர்களோ என்னவோ?

*   *   *

டெலிமாஷஸ் [Telemachus] என்பவர் ஒரு ரிஷி. மனித சமூகத்தில் எவ்வித சுகத்தையும் காணுதவராய் அவர் மலைக் குகைகளில் ஏகாந்தமாய்ப் பல வருஷங்கள் வசித்து வந்தார். உலகிலுள்ள புண்யஸ்தலங்களை யெல்லாம் பார்க்க வேண்டுமென்ற அவா அவருக்கு உண்டாயிற்று. அநேக புண்ய க்ஷேத்திரங்களை தரிசித்துக் கொண்டு எல்லாவற்றிலும் சிரேஷ்டமான ரோம் நகருக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுதுதான் தலை காட்ட ஆரம்பித்து ரோமானியர்களால் நசுக்கப்பட்டுக் கொண்டுவந்த கிருஸ்தவ மதத்தைத் தழுவியவர் அவர். அவர் ரோமாபுரியை அடைந்த தினம்தான் ரோம-கோத யுத்தம் முடிந்து ரோமானியர்கள் கொலீஸியத்தில் கூடியிருந்தார்கள்.

யதேச்சையாகக் கொலீஸியத்தில் நுழைந்த அவர் இரு அடிமைகள் ரத்தம் பிறிடச் சண்டை போடுவதையும் அதைக் கண்டு ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆனந்தப்படுவதையும் பார்த்தார். இந்த அமானுஷ்யச் செய்கையை அவரால் சகிக்கமுடியவில்லை. "சண்டையை நிறுத்துங்கள்" என்று கத்தியவராய் அந்த முற்றத்திற்குள் பாய்ந்தார்.

"வெளியே போ!" "தள்ளு அவனை!", "யாரந்தக் கழுதை?", "மண்டையை நொறுக்கு" .... என்ற கூச்சல்கள் கிளம்பின. ஆனால் அம்மகான் இதற்கெல்லாம் பயந்தவரல்லர். நேரே போய் அவர்களிருவரையும் கையைப் பிடித்துக் கொண்டார். அடுத்த கணம் அவர் மேல் கல்மாரி பொழிந்தது. மனித சுபாவம் அப்படி! அவர்களுக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பின் வாழும், நாகரீகத்தில் மிகவும் முன்னேற்ற மடைந்தவர்களெனப்படும், நமக்கும் அந்த சுபாவம் போகவில்லை.

ஐப்பசி கார்த்திகை காலக் கடுமழை போலப்பெய்து கொண்டிருந்த கல்மாரியின் நடுவில் சாந்த மூர்த்தியாய் நின்று கொண்டு கொஞ்சமும் மனக்கலக்க மில்லாமல் அப்பேர்ப்பட்ட கொடிய செய்கைகளை விட்டு விடும்படி உபதேசித்தார். செவிடன் காதில் ஊதிய சங்கு! கல்மாரி பொழிந்து கொண்டே யிருந்தது. அங்கேயே விழுந்து இறந்தார் மகான் டெலிமாஷஸ். ரோமானியர்கள் நல்ல வழியிற் சென்று உய்யுமாறு பிரார்த்தித்துக் கொண்டே அத் தியாகியின் ஆத்மா சடலத்தை விட்டு விலகிற்று.

*   *   *

மகான்களிடத்தில் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு சக்தி இருக்கிறது. டெலிமாஷஸ் உயிர் துறந்தபின், ரோமானியர்களுக்குத் தங்கள் காரியங்களின் அநீதி என்று மில்லாதவாறு நன்குப் புலப்பட்டது. பழைய தீச்செயல்களின் ஞாபகங்கள் அவர்களுடைய ஹிருதயங்களைத் துளைத்தன புழுக்கள்போல. சீ! மிருகத்தனமாய் நடந்து கொண்டோமே யென்று ஒவ்வொரு உண்மையான ரோமானியனுக்கும் தோன்றிற்று. அன்றுடன் கொலீஸியத்தில் ஒழிந்தன ஜீவன்களைத் திரணமாக மதித்த விளையாட்டுகள்.

அம்மகானின் பரிசுத்தமான ஆத்மாவின் பிரார்த்தனை ஈடேறிற்று.

கடிதம்

சூரிய நமஸ்காரம்

நெற்றி வியர்வை நிலத்தில் விழத் தொழில்செய்து பிழைக்கும் விவசாயிகள் தான் சூரிய நமஸ்காரம் செய்யவேண்டும். கவலையில்லாது வாழும் சோம்பேரிகளுக்கும் இந்த நமஸ்காரத்துக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது.

'என்னாளும் கார்ப்பார் வேளாளர் காண்' என்று கம்பர் சொன்னதுபோல, உழுது பயிர் செய்யாவிடில் இன்று வாழும் மக்கள் உண்ண உணவும் உடுத்த உடையுமின்றி மடிய வேண்டியதுதானே? விவசாயிகளின் பரம்பரையான சொத்து சூரியன்தான் என்பதை நாம் நன்றாக உணரவேண்டும்.

இன்று நாம் கண்கண்டதாய்ப் பார்ப்பது சூரியன்தான். நமக்குக் கிடைக்கும் தான்யாதி வகைகளை சூரியனால்தான் பூமாதேவி பெற்றெடுத்து நமக்களிக்கிறாள். சூரியன்தான் இருளைப் போக்கி ஒளியைக் கொடுக்கிறான். நதி பாய்வதும் பயிர் வளர்வதும் சூரியனாலேயே நடைபெறுகிறதல்லவா? சூரியன் கடலைப் பருகி மழையைப் பொழிய அதனால் பூமி குளிர்ந்து பயிர்கள் செழிக்கின்றன. வரப்புயர நீருயரும், நீருயர நெல் உயரும், நெல் உயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயரும், கோனுயரக் கோவுயர்வான் என்ற உண்மையை நிலைநாட்டுபவன் சூரியனே.

நம் முன்னோர்கள் சூரியன்தான் கடவுள், அவன்தான் நம்மைக் காப்பவன், அவனைத்தான் நாம் தொழ வேண்டும் என்று காலையில் எழுந்தவுடன் கங்கையில் ஸ்நானம் செய்து சூரிய நமஸ்காரம்செய்துவிட்டுத் தான் பிறகு தங்கள் வேலைகளைப் பார்ப்பார்கள். ஆனால் நாமோ இன்று நம் முன்னோர்கள் கையாண்ட சூரிய நமஸ்காரத்தை அடியோடு நிராகரித்து விட்டோம்.

மனிதன் வாழ்விற்கே கெடுதலை யளிக்கும் கணக்கற்ற விஷக்கிருமிகள் சூரியன் ஒளியால் நசித்துப் போகின்றன. வியாதியஸ்தர்கள் முதலியோர்களை வைத்தியர்கள் சூரிய ஒளியில் குணப்படுத்துகிறார்கள்.

அறுவடைகாலமானபோது பாடுபட்டுத் தேடிய நெல், கோதுமை, கம்பு, சோளம் இன்னும் பலவகையான நவ தானியங்களை சூரியனால் விவசாயிகள் குவிக்கின்றார்கள். இந்த இயற்கைச் செல்வத்தை அளிக்கும் சூரிய தேவனை நாம் வணங்க வேண்டாமா? நாம் தினம் எழுந்தவுடன் காலைக்கடன்களை எல்லாம் முடித்துக்கொண்டு நல்ல பரிசுத்தமான நினைப்புடன் சூரிய பகவானுக்கு நமஸ்காரத்தைச் செலுத்த வேண்டுமென்று விவசாய சகோதரர்களை நான் கேட்டுகொள்கிறேன்.

—பி. மாணிக்கம்

வெயில் கோரம்
தெரியாது!
சென்னையில் நவீன முறையில் தொடங்கியிருக்கும்
"கராச்சி
கபே"
KARACHI CAFE
Air Conditioned Room
* சம சீதோஷ்ண கூடத்தில் சற்று தங்கிப் பாருங்கள்.
சிற்றுண்டிகள் எல்லாம் வெகு நேர்த்தி.
பேஷான இடம்.
அன்டர்சன் ஹால்,
எஸ்பிளனேட், சென்னை.
டிராம், பஸ் மார்க்கம்
ஹைகோர்ட்டுக்கு எதிரில்

ஒற்றையங்க நாடகம்

அபிப்ராய பேதம்

"கேஸரி"

[காலை 8 மணி இருக்கும். கூடத்தில் ஊஞ்சலில் நாராயணன் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறார். எதிரில் ஒரு டம்ளரில் காப்பி வைத்திருக்கிறது. அவர் மனைவி கனகம் கூடத்து அறை வாசப்படியில் குந்தியபடி உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். சமையலறையில் குழந்தைகள் சத்தம் போட்டுக்கொண்டு விளையாடிக் கொண்டிருக்கின்றன. மூத்த பெண் ருக்மணி அடுப்பண்டை உட்கார்ந்து கொண்டு காப்பியை ஆற்றிக் குழந்தைகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள்]

கனகம் :—(சமையலறைப் பக்கம் நோக்கி) ருக்மணீ! என்னடி அங்கே அவ்வளவு சத்தம்? அதுகளுக்கெல்லாம் என்ன பூசைக்காப்பு வேணுமா என்ன கேளு. என்ன இது வீடா? கொத்தவால் சாவடியா? நீ தான் இரண்டு அறை வச்சு அதுகள் வாயை மூடச் சொல்லக்கூடாதாடி ருக்மணி?

நாராயணன் :—ஏன்? நீ இங்கே துரைசானி மாதிரி உட்கார்ந்துண்டிருக்கணும், குழந்தை ருக்மணி அந்தப் பசங்களோடே மல்லுக் கொடுக்கணுமா?

கனகம் : — (முகவாய்க்கட்டையில் கையை வைத்துக் கொண்டு) ஐயோ! என்ன ஆசைடாப்பா. திஷ்டியாய் போயிடப் போரது குழந்தை மேலே வச்சிருக்கற ஆசை!......ஹூம்! எதெதெலே அக்கரையிருக்கணுமோ அதிலே ஒண்ணும் காணோமாம், இதிலே வந்தூடுத்து இப்போ அக்கரை!

நா :—எதெதிலே அக்கரையில்லை? கொஞ்சம் சொல்லேன் பார்ப்போம்.

கன :—அதுக்கென்ன வாயாலே சொல்றத்துக்கு? இந்தக் குடும்பத்தையே தலைகீழ தூக்கிண்டு நிக்கறேன்னுகூடச் சொல்லுவீள். காரியத்திலே பாத்தான்னா தெரியும்!

நா:— என்ன நீ காரியத்திலே பாத்துவிட்டே?

கன :—கக்ஷிகாரன் சமாசாரத்தை ஒன்றும் கவனிக்கிறதில்லை. முப்பது நாழியும் இந்த புட்டுக்கூடையை இங்கே ஏன் வச்சே, அந்தத் தட்டுக்கூடையை அங்கே ஏன் வச்சே, அதை ஏன் அப்படிப் பண்ணினே, இதை ஏன் இப்படிப் பண்ணிலைனு கேக்கத்தானே உங்களுக்குச் சரியாக இருக்கு நாழி. குடும்பம் பெருத்துப் போச்சே, பாரம் தலையிலே இடிக்கிறதேன்னு தெரிஞ்சுண்டு நடக்கிறேளா நீங்கள்? என்னமோ இன்னிப்போதாச்சு! நாளைபோதாச்சுன்னு சன்னியாசி மாதிரின்னா காலத்தைக் கழிக்கிறேள்! அப்படித் தப்பித்தவறி சம்ஸார ஞாபகம் வந்துதாணா அது என் தலையிலேதான் வெடியும். என்பேரிலே குத்தம் கண்டுபிடிக்கிறதிலேதான் போகும் உங்களுக்கு யோசனை எல்லாம்.

நா :—(விறைத்துக்கொண்டு) என்ன உளரே! குழந்தே கஷ்டப்படராள் உள்ளே, நீ இங்கே என்ன அட்டகாசம் பண்றேன்னா என்னமோ லெக்சர் பண்றயே. உன்பேரில் வெறுமனே குத்தம் சொல்ல எனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? இல்லே ஒன் பேரிலே துவேஷமா?

கன :—பைத்தியம் பிடிச்சிருந்தாத்தான் நிம்மதியாகப் போயிடுமே! என்ன சொன்னாலும் பைத்தியம் சொல்றதுன்னு காதிலே போட்டுக்காமெ இருந்துடலாமே......... அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்த பாழும் பிரும்மா இருக்கானே அவன் பண்ற கூத்து! நல்லதுக்குக் கெட்டது, கெட்டதுக்கு நல்லதாகச் சேர்த்துப் பொணச்சு வேடிக்கை பார்க்ரானோல்யோ?

நா :—அப்போ நீ நல்லவளோ கெட்டவளோ ?

கன :—நீங்க நல்லவாளா யிருந்தால் நான் கெட்டவள். நீங்க கெட்டவளாக இருந்தால் நான் நல்லவள்.........நான் நல்லவள் !

நா :—அப்போ நான்தான் கெட்டவனு ? சரி! அவ்வளவாவது 'சர்டிபிகெட்' கொடுத்தியே, ரொம்ப தாங்க்ஸ்! நீ உள்ளேபோய் காரியத்தைக் கொஞ்சம் பார்க்கப் போகலாமே. (என்று சொல்லிவிட்டு நாராயணன் எழுந்து போக முயலுகிறர்.)

கன :—(எழுந்து நின்றுக்கொண்டு) எனக்கென்ன? போக்ராமே இங்கே உக்காந்திருக்கப் போவதில்லே! இருந்தாலும், என்னமோ மனசு கேக்கலே. ஏதாவது சொல்லுவோம்னு வந்தேன். கேக்காமப்போனு நான் உள்ளே போறேன்.

(சொல்லிவிட்டு வேகமாகச் சமையலறைக்குள் போகிருள்)

நா :—சரி, அம்மா, வா ! என்ன சொல்லணுமோ எல்லாம் சொல்லித்தீர்த்துவிடு. இன்னிக்குக் கோர்ட்டுக்குப் போகாமல் (போனுல் சனி விட்டது, வா! சொல்லிக்கொண்டே நன்ருக ஊஞ்சலில் மறுபடியும் உட்கார்ந்துக்கொண்டார் நாராயணன்)

கன : (சமையலறையிலிருந்து) நான் ஒண்ணும் வரல்லே. நான் சொல்றதுதான் உங்களுக்கு ஏற்கறதில்லேயே. எனக்கு இன்னும் வாய் வேறயாக்கும். போறும் போறும் எனக்கு விழுந்த செருப்படி.

(என்று அழுகிறுப்போல் பாவனை செய்கிருள்.)

நா : அட எழவே! நீ சொல்லேன்! ஒன்னை யாரு என்ன சொல்லிவிட்டா ? நீயே என்னவோ 'லொடலொட' வென்று கொட்டினே. இப்போ நீயே அழறத்துக்கு ஆரம்பிக்கிறே. நான் ஏதாவது உன்னைச் சொன்னேனு ?

கன : எல்லாம் என் அசட்டுத்தனத்தால்தான். நமக்கேன் இந்தப் பாடு? யாரு எப்படிப்போனுல் எனக்கென்ன? (சொல்லிகொண்டே 'பொத் பொத்' தென்று ஒரு குழந்தையை அடிக்கிருள். 'அடிக்காதேடி' என்று ருக்மணி தடுக்கிருள்.)

நா : ஏண்டி இந்தக் கோபம் ? என்மேலே இருக்கிற கோபத்தைக் குழந்தைமேலே காண்பிக்கிருயா ? பேஷ் ! 'மாட்டுக்காரப் பையனை ஏன்டா காலங்காத்தாலே வரல்லே' என்று எஜமான் அடிச்சானும். அதுக்குப் பதிலா பையன் மாட்டை வயல் பக்கம் ஓட்டிண்டு போய் எஜமான் மேலே இருக்கிற கோபத்தைப் மாட்டுமேலே காண்பிச்சானும். அந்தக் கதைமாதிரியல்லவா இருக்கு நீ செய்யறது ? உன் கோபம்தீர என்னைச் சொல்லேன். நான் கேட்டுக்கறேன்.

கன :— எனக்கு கோபம் வேறேயாக்கும்? ஊர் சிரிக்க நாடு சிரிக்க நான்தான் பொண்ணுப் பிறந்து புதுமையாக வாழ்க்கைப்பட்டிருக்கிறேனே. இந்த அழகுக்குக் கோபம் .... வாயை மூடிண்டிருக்கணும்னுக்கூட மனசு கேக்கல்லே. பக்கத்தாத்திலே நம்மாத்தைப்பத்தி என்ன வம்பளக்கரா தெரியுமோன்னே ?

நா :—(சிரித்துக் கொண்டே) அதான் ரைட் வா. அது சரி! அவா என்ன சொல்றா?

கன :—வயசு வந்த பெண்ணை இன்னும் எத்தனை நாளைக்கு வீட்டிலே வச்சிண்டிருக்கறதுன்னு ஊர்லே எல்லாருந்தான் வம்பளக்கராள். என் மானம் போறது. உங்களுக்கென்ன அதெல்லாம் பத்தி? காப்பி வேளைக்கு காப்பி, சாப்பாடு வேளைக்குச் சாப்பாடு, சண்டை வேளைக்குச் சண்டை !......

நா :—அதெல்லாம் வேண்டாம், நிறுத்து. நேத்துக் கூட குருக்கள்கிட்டே சொன்னேன். எங்கேயாவது வரன் இருந்தால் சொல்லுங்கோன்னு. நானும்தான் விசாரிச்சண்டு வந்திண்டிருக்கேன். ஒண்ணும் ஸ்வாரஸ்யமான் வரனுகக் கிடைக்கல்லியே.

கன :—ஏன் இதுவரையில் வந்த வரனுக்கெல்லாம் என்ன ஆச்சோ ?

நா :—என்ன வரனோ? கிரம்பாடி ராமசாமி ஐயர் பிள்ளை இருக்கானும். பிள்ளை சுத்த முட்டாள். சொத்து என்னமோ கொஞ்சம் இருக்காம்......

கன :— கொஞ்சம் இருக்காமென்ன? நீங்களே சொல்லல்லியோ. 20 காணி நஞ்சை ஆத்துக்கால் வாய்ப்பாச்சல் நிலம் இருக்குன்னு. பிள்ளை தங்கமான பிள்ளையாம். நான் விசாரிச்சேன். அப்படி எல்லாம் துஷ்டை கிஷ்டை இல்லே......

நா :—நீ என்னதான் சொல்லு. எனக்கு என்னமோ பிள்ளை பிடிக்கல்லே. நான் தான் பார்த்தேனே. நான் இங்கே ஹைகோர்ட் வக்கீல். என் மாப்பிள்ளை சுத்த 'இடியட்டாக' இருக்கணுமோ? சீ! சீ! வாயை அலம்பி விட்டுப் பேசு.

கன :—நல்லது பிடிக்காது உங்களுக்கு! அவன் ஒரே பிள்ளைதான். நல்ல சொத்து. நம் குழந்தை கண்ணைக் கசக்காமல் இருக்கும்.

நா :—நான்தான் அதைப்பத்தி பேசாதேன்னு சொன்னேனே.

கன :—இதுதான் போனால் போகிறது. இன்னொரு பிள்ளை ஒன்று சொன்னேளே. அவன் எப்படி?

நா :—யாரு?........பாரத்வாஜ கோத்ரம் பிள்ளையா?

கன :—ஆமாம். அது என்ன சமாசாரம்? எனக்குச் சொல்லுங்கோ.

நா :—என்னத்தைச் சொல்றது? அந்த வரன்தான் கொஞ்சம் தேவலைனு நினைக்கிறேன். பி. ஏ. ஆனர்ஸ் படிக்கிறான். 2 தம்பிகள் இருக்காளாம். ஒரு தங்கை கல்யாணத்துக்கு இருக்காம். தகப்பனுருக்கு 'ஜப்கோ' கம்பெனியில் வேலையாம். 80 ரூ. சம்பளமாம். பையன் நன்னு 'இண்டெலிஜண்டாக' இருக்கான். நீ என்ன சொல்லறே?

கன :—எத்தனை கூடப்பிறந்தவா?

நா :—மூணுபேர்.

கன :—ஒரு பொண், இரண்டு பிள்ளையா? தயார் கூட இருக்காளோல்லயோ? நம்ப ருக்மணிக்குப் பின்னே கவலையே வேண்டாம். மாமியின் உபத்திரவம், நாத்தனார் வேறே, போதாக்குறைக்கு ஓர்ப்படிகள். தொந்தரவுவே போறுமே. நீங்கள் பொண்ணுக்குச் செய்யற அனுகூலம்! நான் உசுரோடே இருக்கற மட்டும் மாமியார் நாத்தனார் இருக்கிற வீட்டுக்கு என் பெண்ணை அனுப்பவே மாட்டேன்.

நா :—சரி அதை 'டிஸ்மிஸ்'பண்ணுட்டையா? நம்ப புரசைவாக்கம் கிட்டு பிள்ளைக்குக் கொடுத்தால் என்ன? பையன் ஏதோ காலேஜில் 'விடேன் தொடேன்' என்று பிராணனை விடுகிறான். ஒரு வீடு இங்கே சொந்தமாம். ஒரே பிள்ளைதான். தாயாரும் இல்லை. தமக்கையும் இல்லை. உனக்கு இஷ்டம் தானே?

கன :—யாரு? புரைசவாக்கம் கிட்டுவா! நன்றாய் சொன்னேள். அவன் பெண்டாட்டியைப் படுத்தினது ஈச்வரனுக்குக் கூடச் சகிக்காது. போயும் போயும் அவனைப் போய் பிடிச்சேளே! அதனாலே லக்ஷம்தான் வரட்டும், அந்த பிள்ளைக்குக் கொடுக்கமாட்டேன். அவன் அப்பனைப் போலே பாடாப் படுத்துவன் என் குழந்தையை.

நா :—என், அந்த ரயில்வே ரங்கஸாமி ஐயர் பிள்ளைக்குக் கொடுக்கலாம். பிள்ளை தங்கக் கம்பியாம்.............என்ன சொத்து இருக்காம்?

கன :—ஸாமி சொன்னன். அப்பாவும் பிள்ளையும் ஓட்டலிலே சாப்பிட்டுண்டிருக்காளாம். அவருக்குக் கூட ஒன்றுமே தெரியாதாம். ரொம்ப சாதுவாம். பிள்ளை அதுக்கு மேலே சாதுவாம். எனக்குத் தோணறது நல்ல வரன்னு. அப்புறம் உங்க இஷ்டம்.

நா :—ஓஹோ! ஸாமி சொன்ன வரன் தானே? அந்தப் பையன் சுத்த 'மம்மி' யாம். அவன் அப்பா பொண்டாட்டிக்குத் தோப்பி கரணம் போட்டுக் கொண்டிருந்தானும்! அவளாலேதான் சொத்து மொத்தம் ஒழிந்ததாம். எனக்குப் பிடிக்கல்லே!

கன :—உங்களுக்கு எது பிடிக்கும்? சுத்த அலத்தா ஏதாவது ஒரு பிள்ளை கிடைக்கும். அது இரண்டு எழுத்து

இங்கிலீஷ் வாசித்திருந்தால் போறும். பொருள் சுகத்தைப் பத்தி உங்களுக்கென்ன கவலே ?

நா :—உனக்கென்ன பிடிக்கும்? பிள்ளே முட்டாளாக எவ்வளவு இருந்தாலும்சரி. அவன் உன் பொண்ணுக்குத் தாஸனுக இருந்து விட்டால் போதும். அவன் சமையல் பண்ணுகிறவனுக இருந்தால் கூடச் சம்மதம்தான் உனக்கு.

கன :—அப்படியா? சரிதான்! நான் என்ன பண்ணட்டும் என் தலேயிலெழுத்து அந்த மாதிரி இருக்கிறது. நான் என்ன சொன்னுலும் அதுக்கு விரோதமாக நீங்க சொல்லும்படியா யிருக்கு.

நா :—நீ சொல்றத்துக் கெல்லாம் நான் கண்ணே மூடிண்டுதான் நேர் எதிராக ஒன்று சொல்றேனு?

கன :—ஆமாம் அப்படியேதான்.

நா :—(சிரித்துக் கொண்டே) ஆனுல் நீ எந்த வரன் பிடித்திருக்கிறதோ அந்த வரனுக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொல். நான் அப்பொழுது கொடுக்கிறேன் என்று சொல்லி அந்த வரனுக்கே நிச்சயம் செய்து விடுகிறேன்!

கன :—ரொம்ப சந்தோஷம்! நான் கல்யாணமே பண்ண வேண்டாம்னு கூடச் சொல்றேன். நீங்கள் நேர் எதிராக சீக்கிரம் பண்ணி முடிச்சால் போறும். எப்படியானு கல்யாணம் முடியவேண்டியது தானே! அப்புறம் அவள் அதிர்ஷ்டம். என் மாதிரி திண்டாடணுமோ, இல்லே, அவள் தலேயிலே நன்ருகத்தான் எழுதி யிருக்கோ. (சொல்லிக் கொண்டே சமையலறைக்குட் செல்கிருள்.)

நா :—நம்மிருவர் அபிப்பிராயமும் ஒத்து இருந்தால் இவ்வளவு நாள் கல்யாணம் ஆய்விட்டிருக்காதோ பொண்ணுக்கு!

(எழுந்து மாடிக்குப் போகிருர்)

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகளும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப் படும்.

வாராவாரம் "பாரத மணி"யில் வெளியாகும் அனுபந்தங்களுக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங்களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும்படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

வத்ஸலாவின் கடிதம்

(ஸ்ரீமதி கமலா பத்மநாபன்)

அன்றொருநாள் மத்தியானம் எங்கள் வீட்டிற்கு எனது சிநேகிதிகள் சிலர் வந்திருந்தார்கள். எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்துகொண்டு தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தோம். அச் சமயம் தபால்காரன் ஒரு பருமனான உறையை என்னிடம் நீட்டி, "அம்மா, நீங்கள் ஒன்றரையணா கொடுக்க வேண்டும். ஒரு அணா ஸ்டாம்புக்குரிய பாரத்திற்குமேல் இரட்டிப்புப் பாரம் அதிகமாக இருக்கிறது இக்கடிதம்" என்று நகைத்துக் கொண்டே கூறினான். கடிதம் என் சிநேகிதி வத்ஸலா விடமிருந்து வந்தது என்று மேல் விலாஸத்திலிருந்து தெரிந்து கொண்டேன்.

"அதிகப்படி சமாசாரங்களை எழுதி நிறைய தாள்களைத் திணிக்கும் ஒருவள் போஸ்ட் செய்வதற்கு முன்பு உறையை நிறுத்துப் பார்க்க மாட்டாளோ!" என்று முணுமுணுத்த வண்ணம் ஒன்றரையணாவை எடுத்துத் தபால்காரனிடம் கொடுத்துவிட்டு உறையை உடைத்தேன்.

இதற்குள் எனது சிநேகிதிகள் எனக்கு இவ்வளவு நீண்ட கடிதம் வந்திருப்பதைப் பற்றி பலவிதமாக வம்புபேச ஆரம்பித்தனர்.

நான் நான்கு பெரிய தாள்களில் வரைந்து தள்ளப்பட்டிருந்த அக்கடிதத்தில் சில வரிகளைப் படித்தபிறகு "ஓஹோ! இப்பொழுது புரிந்தது விஷயம். என்ன டாப்பா வத்ஸலாகூட இவ்வளவு பெரிய கடிதம் எழுதி யிருக்கிறாளே என்று ஆச்சரியப்பட்டேன். சென்ற மாதம் 30-ம் தேதி மேல்கோட்டையில் நடந்த வைரமுடி உத்ஸவத்திற்குத்தான் போகப்போவதாயும், போய்விட்டு வந்த பிறகு அந்த புண்ணிய க்ஷேத்திரத்தைப்பற்றிய விசேஷங்களை எனக்கு எழுதுவதாகவும் வாக்களித்திருந்தாள். அவ்விதமே இதில் எழுதியிருக்கிறாள் போலிருக்கிறது. சரி, சாவகாசமாய் வாசித்துக் கொண்டால் ஆயிற்று" என்று சொல்லி கடிதத்தை மடித்தேன்.

உடனே என் சிநேகிதி சாந்தா ஆத்திரத்துடன் "நீ ரொம்ப சுய நலக்காரியம்மா! ஏன், அந்தக் கடிதத்தை இப்பொழுது எங்கள் முன்பு உரக்க வாசித்தால் நாங்களும் மேல்கோட்டையைப் பற்றிய மகிமையைத் தெரிந்து கொள்ள மாட்டோமா?" என்று சற்று மனத் தாங்கலுடன் சொன்னாள்.

நான் "ஆஹா, அதற்கென்ன தடை வாசிக்கிறேன் கேளுங்கள்! கோபித்துக் கொள்ளாதே சாந்தா. இந்த சமயத்திலாவது நீ உன் பெயருக்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டும்" என்று எச்சரித்துவிட்டு, வத்ஸலாவின் கடிதத்தின் முற்பகுதியை நீக்கி, அவள் மேல்கோட்டையைப்பற்றி எழுதியிருந்த இடத்திலிருந்து வாசிக்கலானேன்.

"நாங்கள் மார்ச் மாதம் 30-ம் தேதி மத்தியானம் ஷிமோகாவிலிருந்து மைசூர் வந்து சேர்ந்தோம். உடனே, மேல்கோட்டைக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்துகொண்டு புறப்பட்டோம். மேல் கோட்டை அல்லது திருநாராயணபுரம் என்று சொல்லப்படும் இவ்வூர் மைசூரிலிருந்து சுமார் 26 மைல்கள் தூரத்தில் இருக்கிறது. ஸ்ரீரங்கப்பட்டணம் தாலுக்காவைச் சேர்ந்தது. நாங்கள் மாலை ஐந்து மணிக்கு மேல்கோட்டை வந்து சேர்ந்தோம். கூட்டமோ கணக்கி லடங்காதது!

"அன்றிரவு பத்து மணிக்குமேல், திருநாராயணஸ்வாமி கோவிலில் இருக்கும் உத்ஸவமூர்த்தியான செல்வராஜஸ்வாமி (செல்லப் பிள்ளை)க்கு வைரமுடி சாத்தப் பட்டு ஊர்வலம் புறப்பட்டது. அந்த வைரமுடியின் அழகைத்தான் என்னவென்று சொல்லுகிறது? கண்ணைப் பறிக்கும் என்பார்களே, அது வெறும் வார்த்தையல்லவென்று எனக்கு இந்த வைரமுடியைப் பார்த்த பிறகுதான் தோன்

றிற்று. என்ன ஜ்வலிப்பு, என்ன ஒளி! அதிக நேரம் உற்றுப் பார்த்தால் கண்கள் மங்கிப் போய்விடப் போகிறதே என்ற நல்லெண்ணத்தினால் தான், சுவாமியின் முன்புறம், அந்தமாதிரி வெண்சாமரங்களை இடைவிடாமல் வீசிக்கொண்டே இருந் தார்கள் போலிருக்கிறது. மேலும் ஒரு இடத்தில் நின்று பெருமாளைச் சில வினாடி கள் சேர்ந்தாற்போல் சேவிக்க முடிய வில்லை. கூட்டம் அப்படி எங்களை நெருக் கித் தள்ளிற்று.

"திருநாராயணஸ்வாமியின் கோவில் பெரியதாக திராவிட ரீதியில் கட்டப்பட் டிருக்கிறது. கோவிலின் உட்புத்தில் "சித் திர மண்டபம்" என்ற ஒரு பெரிய மண் டபம் இருக்கிறது. இதில் நேர்த்தியான சிற்ப வேலைப்பாடுகளுடன் கடையப்பட்ட முப்பத்திரண்டு கருங்கல் தூண்கள் இருக்கின்றன. இத் தூண்களில் செதுக் கப்பட்டிருக்கும் சிற்ப சித்திரங்களை நுட் பமாகக் கவனித்தறிய சில தினங்களாவது வேண்டுமென்று நினைக்கிறேன்.

"இங்கு விசேஷ தீர்த்தமான "கல் யாணி" என்ற புஷ்கரணி பார்ப்பதற்கு வெகு ரம்மியமாக இருக்கிறது. யாத்ரீகர் களின் அனுகூலத்திற்காக இந்தத் தடா கத்தின் நாற்புறங்களிலும் விசாலமான படித்துறைகள் கட்டப்பட்டு மண்டபங் களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக் குளத்திற்கு அருகில்தான் மேல்கோட் டையின் பிரசித்தி பெற்ற "எதுகிரி" என்ற ஒரு சிறிய குன்று இருக்கிறது. சுமார் முன்னூறு படிகளைக் கடந்து நாங் கள் குன்றின் உச்சியை அடைந்தோம். அங்கு கட்டப்பட்டிருக்கும் நரஸிம்ம ஸ்வாமி கோவிலில் பெருமாளைத் தரிசித் தோம். இந்தக் கோவில் அதிக வேலைப் பாடு இன்றி சாதாரணமாய்க் கட்டப்பட் டிருந்தபோதிலும்கூட, குன்றும் கோவி லும் பார்ப்பதற்கு வெகு அழகாகவே இருந்தன.

"இந்த ஊரில் யாத்ரீகர்கள் தங்குவ தற்காக அனேக மண்டபங்களும் சத்தி ரங்களும் கட்டப்பட் டிருக்கின்றன. இது தவிர அநேக வீடுகளின் சொந்தக் காரர்கள் தங்கள் வீட்டின் ஒரு பாகத் தையோ அல்லது ஒரு அறையையோ வைரமுடி உத்சவ சமயத்தில் வாட கைக்கு விடுகிறார்கள்.

"அன்றிரவு நாங்கள் கோவில் அர்ச் சகர் ஒருவரின் வீட்டில் தங்கினோம். நான்தான் அசாத்திய வம்புக்காரி என்று நீ அடிக்கடி சொல்வாயே! என் சுபாவப் படி நான் அர்ச்சகரின் தந்தையான ஒரு கிழவரிடம் மெதுவாகப் பேச் சுக் கொடுத்தேன். அவரிடமிருந்து மேல் கோட்டையைப் பற்றிய சில முக்கியமான விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். அதையும் உனக்கு எழுதுகிறேன். ஆனால் அந்தக் கிழவர் எனக்குச் சொன்னபடியே நான் உனக்கு எழுதினால் உனக்கு ஒன் றுமே விளங்காது. அவருடைய தமிழ் மொழியே ஒரு அலாதி ரகத்தைச் சேர்ந் தது. அவர்களுடன் அடிக்கடிப் பேசிப் பழக்கமுள்ளவர்களுக்குத்தான் அவர்கள் பாஷை புரியும். ஆகையால் கிழவர் எனக்குச் சொன்ன விஷயங்களை நான் நம் தமிழில் மொழிபெயர்த்து எழுது கிறேன்.

"மேல்கோட்டையைப்பற்றி அனேக கதைகள் இருக்கின்றன. அதையெல்லாம் அந்தக்கிழவர் எனக்குச் சொல்லவில்லை. தான் உண்மையென்று நம்பியவற்றை மாத்திரம்தான் தெரிவித்தார். அந்த பிரக் யாதி பெற்ற வைர முடி மானிடர்களால் செய்யப்பட்டது அல்ல என்பது தாத்தா வின் கொள்கை. பண்டைக் காலத்தில், சாக்ஷாத் கிருஷ்ண பகவானால் செல்வரா ஜஸ்வாமி என்ற ஒரு மூர்த்திக்கு வெகு மானமாகக் கொடுக்கப்பட்டதென்பது ஒரு கதையாம். மற்றொன்று, ஆதிசேஷனிடம் மேற் சொன்ன வைர முடி இருந்ததாக வும், அதைக் கருட பகவான் அபகரித்து வந்து செல்வராஜஸ்வாமியின் சிரத்தில் சாத்தியதாகவும் ஐதீகம். சாதாரண நாட் களில் வைர முடி பார்ப்பதற்கு அர்ச்சக ரைத் தவிர வேறு ஒருவரையும் அனு மதிக்கிறதில்லை. ஏனெனில், அப்படிப் பார்ப்பவர்களின் கண்கள் குருடாகப் போய் விடுவதாக மேல்கோட்டை வாசி கள் நம்புகிறார்களாம். வைர முடி உத்ஸவ தினத்தன்று மாத்திரம் இவ்வித பயமில் லாமல் எல்லோரும் அக்கிரீடத்தை தரி சனம் செய்யலாம். மதிப்பிலடங்கா

வைரங்கள் பதிக்கப்பட்ட இந்த சுவர்ணக் கிரீடம் மைசூர் அரண்மனையில் பங்தோபஸ்தில் எப்பொழுதும் வைக்கப்பட்டிருக்கிறது. வைரமுடி உத்ஸவத்திற்கு முதல் நாள் அது மேள தாளங்களுடன் பல்லக்கில் வைத்து மூடப்பட்டு மேல் கோட்டைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. உத்ஸவம் கழிந்த மறுதினமே மறுபடியும் அரண்மனைக்கு வந்து சேருகிறது.

“மேல்கோட்டை என்ற இச் சிறிய ஊர் இப்பொழுது சந்தடி அற்ற ஒரு கிராமமாகத் தோன்றியபோதிலுங் கூட, பழய காலத்து ஹொயஸல சக்கரவர்த்தியான விஷ்ணுவர்த்தனின் அரசாட்சியில் இது தலை நகரமாக விளங்கிற்று. வைஷ்ணவ மதத்தை ஸ்தாபித்த ஸ்ரீ ராமானுஜாசாரியார் வெகு காலம் இந்த புண்ய க்ஷேத்திரத்தில்தான் வசித்து வந்தார். அநேக முறைகள் உத்தர தேசத்திலிருந்து படையெடுத்து வந்த சத்துருக்களாலும், மகமதிய அரசர்களாலும், இந்த ஊர் விழ்த்தப்பட்டபோதிலும் கூட மறுபடியும் சீக்கிரமாகவே தலை எடுத்து விடுமாம். ஒரு சமயம் மொகலாய சக்கரவர்த்தி ஒருவர் மேல்கோட்டையை முற்றுகை யிட்டு ஊரை அழித்துச் செல்வங்களை கைப்பற்றியதுமன்றி செல்வராஜஸ்வாமியின் விக்ரஹத்தையும் அபகரித்துக்கொண்டு டெல்லிக்குத் திரும்பிச் சென்றாராம்.

“சத்துருக்கள் சென்ற பிறகு மிஞ்சி உயிர்வாழ்ந்த மேல்கோட்டை வாசிகள் செல்வராஜஸ்வாமியின் விக்ரஹத்தைக் காணமல் மனம் கலங்கித் தவித்தனர். இப்படியிருக்கையில், வைஷ்ணவ குருவான ராமானுஜருக்கு ஒரு நாள் கனவில் கடவுள் தோன்றி, செல்வராஜஸ்வாமியின் விக்ரஹம் டெல்லியில் மகமதியச் சக்கரவர்த்தியின் அரண்மனையில் இருப்பதாகச் சொல்லி மறைந்தார். தாமதம் இன்றி ஸ்ரீராமனுஜர் சில ஹரிஜன ஆட்களை அழைத்துக் கொண்டு டெல்லிக்குச் சென்று சக்கரவர்த்தியை அணுகி, மேற் சொன்ன விக்ரஹத்தைக் கொடுக்கும்படி வெகு தாழ்மையுடன் வேண்டிக்கொண்டார். சக்கரவர்த்தியும் மனமிறங்கி, தான் மேல்கோட்டையிலிருந்து அபகரித்து வந்த பண்டங்களில் அந்த விக்ரஹம் இருந்தால் எடுத்துச் செல்லும்படி அனுமதி கொடுத்தார். ஆனல் ராமானுஜர் அங்கேயும் தான் தேடிவந்த விக்ரஹத்தைக் காணமல் பெரிதும் ஏமாற்றமடைந்தார். அன்றிரவு அவருடைய சுவப்பனத்தில் கடவுள் இன்னொருமுறை தோன்றி அந்த விக்ரஹம் சக்கரவர்த்தியின் புத்திரியான வார நந்தினியிடம் இருப்பதாயும் அவள் அதை வெகு பக்தியுடன் பூஜித்து வணங்கி வருவதாயும் தெரிவித்து மறைந்தார்.

மறுதினம் காலை ராமானுஜர் சக்கரவர்த்தியின் உத்திரவு பெற்று, அவரையும் அழைத்துக்கொண்டு இளவரசியின் அறைக்குச்சென்று கதவுக்கு வெளிப்புறம் நின்று, “செல்லப்பிள்ளை ராஜா! என் அப்பனே, ஓடிவாடா” என்று பக்தியுடன் கண்களில் நீர் பொழியக் கூவினர். உடனே அந்த விக்ரஹம் அறையிலிருந்து நடந்து வந்து ராமானுஜர் அருகில் நின்றது. சக்கரவர்த்தி ஒன்றும் தோன்றமல் இவ்விந்தையைக் கண்டு ஸ்தம்பித்து நிற்க, ராமானுஜர் விக்ரஹத்தை எடுத்துத் தழுவிக் கொண்டு ஆனந்தத்தாண்டவமாடினர். பிறகு சக்கரவர்த்தி வெகுமரியாதையுடன் விக்ரஹத்தை ராமானுஜருடன் பல்லக்கில் வைத்து திருநாராயணபுரத்திற்கு அனுப்பினர்.

ஆனல், மகமதிய இளவரசியான வார நந்தினி, தான் பக்தி சிரத்தையுடன் போற்றிவந்த விக்ரஹத்தைப் பிரிந்த துயரம் தாளாமல் மனமுடைந்து போனள். பிறகு, ஒருநாள் யாருக்கும் தெரியாமல் குதிரை மீதேறி இராப்பகலாய் வெகு தினங்கள் பிரயாணம் செய்து கடைசியில் துவண்டுபோய் மேல்கோட்டையை அடைந்தாள். செல்வராஜ ஸ்வாமி வைக்கப்பட்டிருந்த இடத்தை அடைந்து விக்ரஹத்தைப் பிரேமையுடன் தழுவிக் கொண்ட தக்ஷணமே மாயமாய் மறைந்து விட்டாள். தன்னிடம் அவள் கொண்டிருந்த ஒப்பற்ற பக்திக்கு மகிழ்ந்து கடவுள் அவளைத் தன்னுடன் ஐக்கியம் செய்துகொண்டு விட்டார். இதுதான் அந்தக் கிழவர் எனக்குச் சொன்ன வரலாறு.

இந்த இளவரசியின் ஞாபகார்த்தமாக அவளுடைய பிரதிமை ஒன்றை தங்கத்தில் செய்து அதை நாராயணஸ்வாமியின் பாதங்களுக்கு அருகில் வைத்து இன்றைக்கும் நாளைக்கும் பூஜை செய்து வருகிறார்கள். மேலும் இப்பெண்மணியின் கோவில் ஒன்று பிரத்தியேகமாக எதுகிரி என்ற குன்றின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. அதில் பிரதி வருஷமும் ஜாத்திரை நடக்கிறது.

"டெல்லியிலிருந்து செல்வராஜஸ்வாமியின் விக்ரஹத்தை எடுத்து வந்தபொழுது ஹரிஜனங்கள் சிலர் ராமானுஜருக்கு உதவியாக இருந்தபடியால் அவர்களை வைரமுடி உத்ஸவ சமயத்தில் மாத்திரம் கோவிலுள் அனுமதித்து சுவாமி தரிசனம் செய்ய விடுகிறார்கள்.

"கல்யாணி என்ற புஷ்கரணியில் உண்டான தீர்த்தம், மகாவிஷ்ணு ஒரு சமயம் ஒரு அரக்கனுடன் யுத்தம் செய்த பொழுது அவர் சரீரத்திலிருந்து சொட்டிய வேர்வைத் துளியிலிருந்து உற்பத்தியானதாம். இந்த ஊரில் பூமியில் ஒரு வித நயமான வெளுப்புமண் அகப்படுகிறது. இதை ஸ்ரீவைஷ்ணவர்கள் வெகு சிரேஷ்டமாகக் கருதி நாமம் இட்டுக்கொள்ள உபயோகிக்கிறார்கள். மேலும், மேலக்கோட்டையில் நெய்யப்படும் சிகப்புப் பட்டைக்கரைபோட்ட வேஷ்டிகளுக்கு மைசூர் ராஜ்யத்தில் ஒரு தனிச் சிறப்பு உண்டு.

"பொதுவில்; வைரமுடி சேவை வெகு சிறப்பாகத்தானிருந்தது. நீ ஒரு வருஷம் கட்டாயம் போய்ப்பார்த்துவிட்டு வர வேண்டும். வைரமுடி உத்ஸவ சமயத்தில் நாலுதிக்குகளிலிருந்தும் நானாவித ஜனங்கள் வந்து கூடுவதால் பலவித தொத்து நோய்கள் ஏற்படக் காரணமுண்டாகிறது என்று அஞ்சி சிலர் சாதாரண நாட்களில் திருநாராயணபுரம் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வருகிறார்கள். நீயும் மேற்சொன்ன வகுப்பைச் சேர்ந்தவளான படியால் சாதாரண நாட்களிலாவது போய் சேவை செய்துவிட்டு வா. ஆனால் வைரமுடியைப் பார்க்கவில்லை என்று பின்னால் குறைப்படாதே" என்று வாசித்து முடித்தேன். வத்ஸலா மேல்கோட்டையைப் பற்றிக் கூறியிருந்த விஷயங்கள் முடித்தும் எங்கள் மீட்டிங்கும் முடிந்தது.

சமயோசித புத்தி

(ஸ்ரீ வி. சங்கரன்)

ஒரே ஒரு ஊரில் தமனகன் என்று மிகவும் கியாதி பெற்ற ஒரு அரசன் தன் ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்தான். தமனகனுக்கு குமணன் என்ற ஒரு பிள்ளையைத் தவிர வேறு சந்ததியே இல்லை. குமணனோ மிகவும் அழகு வாய்ந்தவன். தமனகன் தன் பிள்ளை குமணனிடம் மிகவும் அன்பு பாராட்டி வந்தான். தமனகனின் மந்திரியின் பெயர் நாராயணன். நாராயணன் எல்லா நற்குணங்களாலும் நிறப்பப்பட்டிருந்த போதிலும் பொறுமை மட்டும் அவனிடம் குடிகொண்டிருந்தது. தன் மந்திரி குமணனிடம் எவ்வளவு பொறுமையாயிருந்தபோதிலும், தமனகன் நாராயணனை எப்பொழுதும் தன் பிள்ளை குமணன் பக்கத்திலேயே இருக்கும்படியும் என்ன தீங்கு ஏற்பட்ட போதிலும் அதைத் தடுப்பதற்கு எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தான். நாராயணனால் இக்கட்டளையை மீற முடியவில்லை.

குமணனோ வேட்டை ஆடுவதில் மிகவும் திறமை வாய்ந்தவன். ஒரு நாள் வேட்டை ஆடுவதற்காக நாராயணனுடனும் மற்றும் சில வேலைக்காரர்களுடனும் குமணன் காட்டிற்குச் சென்றான். பிறகு வேட்டை ஆடின சிரமத்தினால் எல்லோரும் சற்று உறங்கலானார்கள். அப்பொழுது அவர்கள் எதிரில் ஒரு மான் ஓடிற்று. அந்த மானைப் பார்த்து விட்டு நாராயணன் "ஏ! குமணா! அந்த மானை வேட்டையாடிக் கொண்டுவா பார்ப்போம்" என்றான்.

இக்கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு, உடனே தன் குதிரைமேலேறிக்கொண்டு அதைப் பின்தொடர்ந்தான். வெகுதூரம் சென்ற பின் அந்தமான் எங்கோ மாயமாய் மறைந்து விட்டது. குமணனோ வழி தெரியாதவனாய், சோர்வடைந்து ஒன்றும் தெரியாமல் விழித்தான். ஆனால் குமணன் தைர்யத்தைக் கைவிடாமல் மேலே மேலே போகலானான். இப்படி இருக்கையில், தற்செயலாக ஒரு குளக்கரையை அடைந்தான். என்ன ஆச்சரியம்! அக்குளக்கரையில் தன்னந் தனியே அழுது கொண்டிருக்கும் ஒரு ராஜ குமாரியைப் பார்த்தான். உடனே அவளை அடைந்து,

"ஏ! அநாதைப் பெண்ணே! நீயார்? ஏன் தன்னந் தனியே இப்பாழும் காட்டில் உட்கார்ந்திருக்கிறாய்?" என்று வினவினான் குமணன்.

அதற்கு அவள் "நான் ஒரு ராஜகுமாரி. என் தகப்பனார் ஒரு பெரிய யுத்தத்தில் மாண்டுபோனார். உடனே விரோதிகள் என்னைக் கைதியாக்க வந்தார்கள். ஆனால் கடவுளின் கடாக்ஷத்தினால் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு இங்கு ஓடி வந்தேன். இங்கு நான் வழி தெரியாமல் உட்கார்ந்திருக்கிறேன்" என்று பதிலுரைத்தாள். அதற்கு குமணன் "ஏ! ராஜகுமாரி! நீ என்னுடன் என் ராஜ்யத்திற்கு வா. நாம் இருவரும் மணம் செய்து கொண்டு சுகமாகக் காலம் தள்ளலாம்" என்றான். அதற்கு அவள் சம்மதப்படவே, அவளைத் தன் குதிரைமேலேற்றிக்கொண்டு போனான்.

சிறிது தூரம் சென்றபின், அவர்கள் இருவரும் ஒரு இடிந்த கோட்டை ஒன்றை அடைந்தார்கள். அதன் அருகில் வந்தவுடன் "ஏ! ராஜகுமாரனே! இங்கு சற்று நிறுத்து. நான்

சிறிது நேரத்தில் இங்கு வந்துவிடுகிறேன்” என்று அவள் சொன்னாள். உடனே அவளைக் குதிரையிலிருந்து கீழே இறக்கிவிட்டு அவளுக்காக காத்துக் கொண்டிருந்தான். வெகு நேரம் ஆகியும் அவள் வரவில்லை. ‘அவளுக்கு என்ன நேரிட்டதோ’ என்று நினைத்துக்கொண்டே அவள் போன வழியே பின்தொடர்ந்தான். இப்படிப் போய்க் கொண்டிருக்கையில் பல குரல்கள் கேட்டன. உடனே குமணன் சற்று மறைவாக நின்று கொண்டு பின்வரும் சம்பாஷணையைக் கேட்கலானான்.

ராஜகுமாரி: ஏ! என் அன்பார்ந்த குழந்தைகளே! உங்களுக்காக இன்றைய தினம் மிகவும் கொழுத்த ஒரு மனிதனைக் கொண்டு வந்திருக்கிறேன்.

குழந்தைகள்: அம்மா! சீக்கிரமாக அவனை இங்கே அழைத்து வா. நாங்கள் அவனைக் கொன்று எங்கள் பசியைத் தீர்த்துக் கொள்ளுகிறோம்.

இதைக் கேட்டவுடனே குமணனுக்கு மயிர்க் கூச்சலிட்டது. என் செய்வதென்று தெரியவில்லை. தன்னை இன்னும் சில நேரத்தில் ராக்ஷஸி கொலை செய்து விடுவாளே என்று பயந்து கொண்டே தன் குதிரையை அடைந்தான். இப்படி இருக்கையில் அந்த ராஜகுமாரி அவன் முன்னே பிரசன்னமானாள். உடனே அவள் “ஏன் இப்படி நடுங்கிக் கொண்டு இருக்கிறீர்கள்?” என்று குமணனை வினவினாள்.

குமணன்: ஐயோ! இக்காட்டில் என் விரோதி ஒருவன் இருக்கிறான். அதனால் தான் பயப்படுகிறேன்.

ராஜகுமாரி: நீயோ ஒரு பெரிய ராஜகுமாரன். அகையால் அவனுக்கு வேணுமென்கிறதைக் கொடுத்து அனுப்பிவிடலாமே.

குமணன்: அவனுக்குப் பணம் வேண்டாமாம். என் உயிர் தான் வேண்டுமாம்.

ராஜகுமாரி: அந்த விரோதி யார்? அவனை எனக்குக் காட்டுவாயா?

குமணன்: காட்டுகிறேன். இப்படி என்னோடுவா. அதோ அந்த மலையடிவாரத்தில் ஒளிந்திருக்கிறான்.

குமணன் வழி காண்பிக்க, ராஜகுமாரி பின்னே சென்றாள். குமணன் தன் படைகள் இருந்த இடத்திற்கு வந்து விட்டான். பிறகு என்ன செய்தான் என்று கேட்க வேண்டுமா? வீரர்களுக்கு மெதுவாக சமிக்ஞை செய்யவே அவர்கள் ராஜகுமாரியை வெட்டி வீழ்த்தினார்கள். அவள் ராக்ஷஸரூபத்துடன் கீழே விழுந்து உயிர்விட்டாள்.



பாலஸ்தீனம்

(ஸ்ரீ. த. கிருஷ்ணமூர்த்தி)

1919-ம் வருஷம் நவம்பர் 2-ம் தேதி இங்கிலாந்தின் வெளிநாட்டு மந்திரி பால்போர் பிரபு பாலஸ்தீனத்தை யூதர்கள் இருப்பிடமாகச் செய்வதாக வாக்களித்தார். சமாதான மாகாநாட்டின் போதும் அமீர்பெய்ஸலும் அதனை ஏற்றுக்கொண்டார். ஆனால் மாக்மோகன்துரை 1915-ம் வருஷத்தில் பெய்ஸலின் தந்தை ஹுசேனிடம் துருக்கிக்கு விரோதமாக அராபியர் கலகம் புரிந்தால் தனி அரபு நாடு நிறுவ உதவுவதாக ஒப்புக்கொண்டதாகவும் அதில் பாலஸ்தீனத்தையும் குறிப்பிட்டதாகவும் அராபியர் கூறுகிறார்கள். சமீபத்தில் வெளியிடப்பட்ட மாக்மோகன் அரசியல் கடிதங்களில் அவ்வாறான உறுதி எதையும் காணோம். 1920-ல் பாலஸ்தீனம் பிரிட்டிஷ் பாதுகாப்பில் வருமென்று அறிவிக்கப்பட்டபோதே யூதர்களுக்கு விரோதமாகக் கலகம் சிறிது தலைகாட்டியது. எனினும் 1925-ம் வருஷம் இறுதியில் சற்று அமைதி ஏற்பட பிரிட்டிஷ் படை குறைக்கப்பட்டது. ஹுசேனுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி அவர் மகன் அப்துல்லா தலைமையில் 1923-ல் டிரான்ஸ் ஜார்டானியா தனிநாடாக நிறுவப்பட்டது. ஈரான் ஹுசேன் மூத்தமகன் பெய்ஸலுக்கு விடப்பட்டது.

எருசலேம்

1922-ம் வருஷத்தில் காலனிகளின் மந்திரியாகிய வின்ஸ்டன் சர்ச்சில் பாலஸ்தீனத்திற்குச் சுயஆட்சி கொடுப்பதற்குத் தயாராயிருந்தார். ஆனால் அராபியர்களின் பிடிவாதத் தன்மையையும் சிறுபான்மையோரிடம் அவர்கள் நடந்துகொள்ளும் கொடூரத்தன்மையுமே அவரை மேலும் அம்முயற்சியில் இறங்கவிடவில்லை. 1929-ம் வருஷத்தில் யூதர் அராபியர் நெருக்கடி வலுத்தது. எருசலேத்திலுள்ள "சோகச்சுவர்" யூதர்களுக்குப் புனிதமான இடம். அச்சுவரே அவர்களது பழைய ஆலயத்தின் எஞ்சிய சுவராகும். ஆண்டிலொரு நாள் அச்சுவரிடைசென்று தங்கள் சமய ஆட்சி ஒழிவைக் குறித்துத் துக்கிப்பதுண்டு. துருக்கியின் ஆட்சியிலும் அவர்கள் கொண்டாட்டம் அனுமதிக்கப்பட்டது. அதைச்சுற்றியுள்ள இடத்தில்தான் முகம்மது நபியைச் சுவர்க்கத்திற்குக் கொண்டுபோன புராக் லாயமாகும். ஆகவே, அது அவர்களுக்கும் புனிதஇடம். 1929-ல் இரண்டு கொண்டாட்டங்களும் சேர்ந்தாற் நிகழவே நெருக்கடி வலுக்க இடமேற்பட்டது. சுவரைச்சுற்றியுள்ள இடங்கள்யாவும் முஸ்லீம்களுக்கே சொந்தம். அதனைப் பல தடவை யூதர் வாங்க முயன்றும் விற்பாரில்லை. இருதரத்தவருக்கும் ஆகஸ்ட் மாதத்தில் சச்சரவு நிகழ்ந்ததின் காரணமாக 133 யூதர்களும் 116 அராபியரும் கொல்லப்பட்டனர். அதனால் இருதரப்பாரிடையும் மனத்தாங்கல் ஏற்பட்டது. பாலஸ்தீன சர்க்கார் யூதர்கள் குடியேறக்கூடிய தொகையையும் நிலம் வாங்குவதையும் கட்டுப்படுத்தத் தொடங்கினர். எந்த அராபியனும் தன் குடுத்தனத்திற்குப் போதுமான அளவிற்கு விளை நிலம் வைத்துக்கொள்ளாமல் நிலம் விற்கக் கூடாதெனச் சட்டமியற்றப்பட்டது.

ஒற்றுமை முயற்சி

யூதர் குடியேற்றம் முதல் முதல் துவக்கப்பட்டபோது பாலஸ்தீனத்தில் அம்மாபினர் குடியேற்றம் குறைவாகவே யிருந்தது. 1926–28ல் அந்நாட்டில் பொருளாதார மந்தம் ஏற்படவே குடியேற்றமும், வெளியேற்றமும் சரியாக விருந்தது. ஆனால் 1928 லிருந்து 1932 வரை ஆண்டுக்கு சுமார் 5,000 யூதர்களே குடியேறினர். ஆனால் அவ்வருஷத்திலிருந்து ஒவ்வொரு வருஷத்திலும் குடியேறும் தொகை அபரிமிதமாகப் பெருக ஆரம்பித்தது. ஜெர்மனியில் நாஜி கொடுமையாலும் அதன் எதிரொலியாக பிற நாடுகளிலும் யூதர்களுக்குத் தீங்கிழைக்கப்படவே

யூதர்கள் பெருக்கம் குறித்த அளவிற்கு மேலும் பல மடங்கு பெருகியது. அதனைக் கண்டு அராபியர் வெருண்டனர். உடனே குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தா விட்டால் பாலஸ்தீனம் யூதர் நாடாகிவிடுமென்பதைக் கண்டார்கள். ஆகவே 1935-ல் அராபியத் தலைவர்கள் உடனே யூதர்களுக்கு நிலங்கள் விற்பனை செய்வதையும் அவர்கள் குடியேற்றத்தையும் தடுக்க வேண்டுமென்றும் ஜனநாயக ஆட்சி நிறுவ வேண்டுமென்றும் கோரினர். பிரிட்டிஷ் அரசாங்கம் அவைகளை முற்றும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவர்களுடன் சமரசம் செய்து கொள்ளத் தயாராயிருந்தனர். அதற்கு யூதர்கள் தயாராயில்லை. அதுகாலை அபிசீனியப் போரினால் பிரிட்டிஷ்-இதாலி உறவு கெடவே இதாலி பாலஸ்தீன அராபியர்களைத் தூண்ட கலகம் நாடெங்கும் பரவியது. அதன் விளைவாக அரசியல் நிலைமை விசாரிக்க விசாரணைக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. அது பாலஸ்தீனை யூதர் பாகமாகவும், அரபியர் பாகமாகவும் பிரிக்கச் சிபார்சு செய்தது. அம்முடிவை இருதரப்பினரும் ஏற்க மறுத்து விட்டனர்.

ஒரு யோசனை

ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் தங்கள் முயற்சியை விட்டுவிடவில்லை. சுதந்திர அரபு நாடுகளின் மூலமாக அமைதி நிறுவ மகாநாடு கூட்டினர். அதுவும் பயனற்றுப் போய்விட்டது. உலகத்தில் மற்றெல்லா நாடுகளையும் விட முஸ்லீம்கள் அதிகமுள்ள இந்தியாவும் அரபுகளின் கோரிக்கையை ஆதரிக்கிறது. ஹெர் ஹிட்லரும் பாலஸ்தீனத்தைச் சுட்டிக் காண்பிக்கிறார். உலகத்தில் யுத்த நெருக்கடி பெருகுகிறது. ஆகவே எகிப்தின் மூலமாக சமரசம் பேச முயற்சி நடக்கிறது. பாலஸ்தீன மொத்த ஜனத்தொகையில் மூன்றிலொரு பாகம் வரையில் யூதர் குடியேற அனுமதிப்பதென்றும் சில ஆண்டுகளிலேயே பொறுப்பாட்சி நிறுவுவதென்றும் தீர்மானிக்கப்படுவதாகத் தெரிகிறது. அம்முயற்சி வரவேற்கத்தக்கது.

அரபுகளுக்கு உடனே சுதந்திரம் கொடுத்து விட்டால் யூதர்களின் நிலை என்னாகுமென்று சொல்லத் தேவையில்லை. ஈராகுக்குச் சுதந்திரங்கொடுத்ததால் அஸ்ஸீரியக் கிறிஸ்தவர் பட்டபாட்டையும், துருக்கியின் ஆட்சியில் அர்மீனியக் கிறிஸ்தவர் பட்டபாட்டையும் உணரவேண்டும். அரபுக்கடலில் யூதர்பாடு அதோகதிதான். ஆகவே பிரிட்டிஷ் ஆட்சியாவது அங்கு இருக்கவேண்டும் அல்லது யூதர்களின் தொகை மேலும் பெருகவேண்டும். முஸ்லிம்களுக்கு மெக்கா எப்படிப் பிரதானமோ அவ்வாறே எருசலேம் கிறிஸ்தவருக்கும் யூதர்களுக்கும் பிரதானமாகும். ஆகவே மூன்று சமூகத்தினரும் அந்நாட்டில் ஒத்து வாழ்வதே சிறந்ததாம்.

நியாயமான கோரிக்கை

யூதர் தங்கள் மூதாதையர் நாட்டிலேயே குடியேற விரும்புவதை நீதியை விரும்புவோன் தடுக்க முடியுமா? ஆனால் அந்நாடு எவ்வளவு தாங்குமோ அந்த அளவிற்கே குடியேற்றத்தை அநுமதிக்கவேண்டும். யூதர்கள் இருப்பது அரபுகளுக்குப் பிடிக்காவிட்டால் பீல் கமிட்டி சிபார்சின்படி பாலஸ்தீனைப் பிரித்துக்கொண்டு தாங்கள் டிரான்ஸ் ஜார்டனுடன் சேருவதே அவர்களுக்கு நல்லது. யூதர்கள் பிரிவினையை எதிர்ப்பதும் விவேகமல்ல. உலகத்தில் அவர்களை ஆதரிப்பார் இல்லாதிருக்கும் போது அரபு நாடுகளிடை அவர்கள் தங்களுக்கென ஒரு பிரதேசத்தை அவர்கள் சம்மதமின்றி வகுத்துக் கொண்டால் அவர்கள் எவ்வளவு காலந்தான் சுதந்திரமாக வாழ முடியும்? அவர்கள் அஸ்ஸீரியர், அர்மீனியர் முடிவைக் கருதவேண்டும். ஆகவே தங்கள் ஆசையைப் பெரிதும் கட்டுப்படுத்தி அரபுகளின் கோரிக்கை சற்று வரம்பு கடந்தாலும் உலக அமைதிக்காகச் சற்றுவிட்டுக்கொடுத்து சமாதான முறையிலேயே தங்கள் குடியேற்றத்தைப் பெருக்கினால் தான் அங்கு வாழமுடியும். இந்த உலகம் நீதியில் வெட்டொன்று துண்டு இரண்டாக வரையறுத்து நிற்க முடியுமா?

பிரிட்டன் யுக்தி

பிரிட்டன் தன் சாம்ராஜ்யப் பாதுகாப்பிற்கே மத்தியதரைக்கடற் புரத்தில் நேச

நாட்டினர் இருக்கவேண்டுமென்று தான் யூதர்களைக் குடியேற்ற உதவுகிறது. வட ஆஸ்திரேலியா போன்று பல காலனிகள் காலியாக இருக்கும்போது அவைகளில் யூதர்களைக்குடியேறுவதற்குச் சௌகரியம் செய்துகொடுக்காமல் பாலஸ்தீனத்தையே வற்புறுத்தி யூதர்களுக்கும் அரபுகளுக்கும் மனக்கசப்பு ஏற்படப் காரணமாயிருப்பதைக் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. யூதர் பாலஸ்தீனம் எல்லா யூதர்களையும் கொள்ளாது என்பது வெள்ளிடை மலை. அங்குள்ள அரபுகளை வெருட்டி யூதர் குடியேற்றத்தை அனுமதிப்பதும் அறமல்ல; முடியவும் முடியாது. ஆகவே கெய்ரோ பிரேரணையை இருதரத்தாரையும் ஏற்றுக் கொள்ளச் செய்வதுடன் மற்ற யூதர்களின் குடியேற்றத்திற்குத் தன் சாம்ராஜ்யத்தில் குடியேற வசதி அளிக்கவேண்டும். இல்லாவிட்டால் அது யூதர்களிடம் அனுதாபங் கொண்டதில்லையென்றும் தன் சாம்ராஜ்ய பாதுகாப்பிற்கே பாலஸ்தீனத்தில் அவர்கள் குடியேற்றத்தைப் புகுத்துகிறதென்றும் உலகம் பொருள் கொள்ளும்.

எதிர்கால பாலஸ்தீனம் அரபு நாடாகவோ அன்றி யூதர் நாடாகவோ கருதப் படக்கூடாது. யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இது பிரதான புண்ணியபூமியாயிருப்பதுடன் முஸ்லிம்களுக்கும் ஒரு வகையில் புண்ணிய பூமியாகும். ஆகவே அந்நாடு கிறிஸ்தவ, யூத, முஸ்லிம் நாடாகக் கருதப்படவேண்டும். அதற்கான வகையில் அரசியலமைப்பு நிறுவப்படுவதுடன் உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் அதன் சுதந்திரத்தில் அக்கரை காட்டவேண்டும்.

முடிவாக பாலஸ்தீனம் யூதர் குடியேற்றத்தால் பொருளாதாரத் துறையில் மிகவும் முன்னேறியிருக்கிறதென்றும் அதனால் அரபுகளும் நன்மை அடைந்திருக்கிறார்களென்றும் குறிப்பிடவேண்டியது அவசியமாகும்.

வர விக்கிரயத்தில் ஓர் காட்சி

அரிசி வியாபாரம்

எப்படிப் பார்த்தாலும் அரிசிதான் இந்தியாவின் முக்கிய விளைபொருள் என்று கூற வேண்டும். பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் அதைத்தான் சாப்பிடுகிறார்கள். இந்தியாவின் பல பாகங்களிலும் அது விளைகிறது. 1931-32-ம் வருஷத்தில் சுமார் 8½ லக்ஷம் ஏகர்கள் சாகுபடியாகியிருக்கின்றன. ஆனால் கோதுமை 3½ லக்ஷம் ஏகர்களும் பருத்தி 2½ லக்ஷம் ஏகர்களும்தான்.

வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை, பர்மா இந்த மாகாணங்களில் அரிசி முக்கியமாகப் பயிராக்கப்படுகிறது. பர்மாவைத் தவிர மற்ற பிரதேசங்களில் விளையும் நெல்லில் பெரும்பகுதியை அந்தப் பிரதேசத்திலுள்ள ஜனங்களே வாங்கிக்கொள்கிறார்கள். வங்காளமும் தென்னிந்தியாவும் நல்ல ரகமுள்ள அரிசியை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு மட்ட ரக அரிசியை பர்மாவிடமிருந்து வாங்கிக்கொள்வது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் அரிசி ஏற்றுமதிக்கு சில வருஷங்களாக பாதகமேற்பட்டிருப்பதைக் காண்கிறோம். சில வருஷங்களுக்குமுன் ஒருவரும் எதிர்பார்க்காத முறையில் இப்போது இந்தியாவில் ஏற்றுமதிக்குத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. உண்மையில், இந்தியா, ஐரோப்பிய மார்க்கட்டை இழந்துவிட்டதென்றே கூறலாம். ஆனால் அரிசி உற்பத்தியில் இந்தியாவைத் தோற்கடிப்பதென்பது சிரமமான கார்யம். அரிசி உற்பத்தியில் இந்தியாவுக்கும் மற்ற தேசங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள்.

அரிசி விளைவு

(கீழ்க்கண்ட எண்ணிக்கையுடன் 000-ஐச் சேர்த்து வாசிக்கவும்)

	1929-30	1935-36
பிரிட்டிஷ் இந்தியா	474,949	425,672
ஜப்பான்	107,703	106,638
டட்ச்ஈஸ்ட் இண்டீஸ்	54,792	57,476
ஸயாம்	39,058	47,270
அமெரிக்கா	8,288	7,917
இதாலி	6,737	7,352
ஆபிரிக்கா	16,980	22,000
ஐரோப்பா (ருஷ்யாவைச் சேர்த்து)	10,215	12,413
உலகம்	8,56,000	8,48,000

ஆகவே, இந்தியா உலகத்தின் மொத்தத்தில் சரிபாதி உற்பத்தி செய்கிறது என்பதை அறியலாம். ஆனால் இந்தியாவின் உற்பத்தி வரவரக் குறைந்துவருவது தெரிகிறது. மற்ற தேசங்கள் கொஞ்சம் கொஞ்சமாக உற்பத்தியை அதிகரித்து வந்திருக்கின்றன.

இந்திய உற்பத்திக் குறைவுக்கும் மற்ற தேச உற்பத்தியில் அபிவிருத்திக்கும் காரணமிருக்கிறது. இந்தியா அயல்நாட்டு மார்க்கெட்டை இழந்து கொண்டு வருவதும் இந்தியாவிடமிருந்து இதுவரை அரிசி வாங்கிக்கொண்டு வந்த தேசங்களே இப்போது இந்தியாவுடன் போட்டிபோட ஆரம்பித்திருப்பதும்தான் இதற்குக் காரணம். 1926-ம் வருஷத்தில் இந்தியா பிரிட்டனின் ஏஃகு இறக்குமதிக்குச் சலுகை காண்பித்ததால் ஜப்பான் கோபங்கொண்டு இந்திய அரிசி இறக்குமதியின் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. இதிலிருந்து இந்தியாவின் க்ஷீணதசை ஆரம்பமாயிற்று. இதனால் இந்தியா ஜப்பானிய மார்க்கட்டை இழந்தது. இப்போது ஜப்பான் அரிசி இறக்குமதி செய்ததுபோக ஏற்றுமதி செய்ய ஆரம்பித்துவிட்டது. மேலும், ஐரோப்பாவின் மேற்குப் பிரதேசங்களிலும் தெற்குப் பிரதேசங்களிலும் அரிசி சாகுபடி செய்யலாம் என்று கண்டுபிடித்து விட்டார்கள். மத்யதரைக் கடலை அடுத்துள்ள பிரதேசங்கள் மிகவும் செழிப்புள்ளவை என்று தெரிந்து கொண்டார்கள். சமீபத்தில் நடந்த ஓர் ஒப்பந்தத்தால் ஜெர்மனிக்குத் தேவையான அரிசியில் பெரும் பகுதியை இதாலி சப்ளை செய்வதென்று ஏற்பாடாயிற்று. மகா யுத்தத்திற்கு முன்னால் மொத்த ஏற்றுமதியில் சரிபாதி இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்குப் போயிற்று. ஆனால் இப்போது மொத்த ஏற்றுமதியில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருப்பதல்லாமல் ஏற்றுமதி செய்யும் திக்கே மாறியிருக்கிறது.

இந்திய அரிசி ஏற்றுமதி
(டன்கள்)

	1930-31	34-35	37-38
இங்கிலாந்துக்கு	57,876	88,375	5,864
ஜெர்மனி	1,62,238	157,934	103
நெதர்லாந்து	100,364	56,408	5,743
சிலோன்	444,237	3,91,501	91,101
மலாயா	265,335	135,436	7,761
சுமத்ரா	124,308	70,013	,,
சைனா	467,246	173,425	4
எகிப்து	21,921	29,883	30
கியூபா	61,892	16,715	3,15
மற்ற தேசங்களுக்கு	513,368	466,847	113,508
மொத்தம்	2253,784	1592,517	227,256

மேற்சொன்ன அட்டவணையில் (1937-38) வருஷம் தவிர பாக்கி வருஷங்களில் பர்மாவின் எற்றுமதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1937-38-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் இந்தியாவின் எற்றுமதி மட்டும் தான் மேலே கொடுக்கப்பட்டிருக்கிறது. பர்மா பிரிவினைக்கு முன்னால் இந்திய எற்றுமதியின் 90% பர்மாவுடையது. பர்மா சமீபகாலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு அரிசி இறக்குமதி செய்து வருகிறது. மிகவும் மலிவான விலைக்கு வங்காளத்திலும் தென்னிந்தியாவிலும் பர்மா அரிசி வந்து குவிந்து கொண்டிருக்கிறது. இதனால் உள்நாட்டுச் சந்தையில் அரிசி விலை இறங்கிவிட்டது. இந்தியா தன் தேவையைப் பூர்த்தி செய்யும் திறமை கொண்டிருக்கும்போது இந்த பர்மா இறக்குமதி மிகவும் துக்ககரமான விஷயம். ஆகையால் பர்மா இறக்குமதியைத் தடுத்து இத்தேசத்தின் அரிசி விலையைச் சீர்படுத்த வேண்டியது அவசியம். பர்மா போட்டி உள்ளவரை அதிக அரிசி விளைவிப்பதுகூட லாபமில்லை.

ஸயாம், இந்தோ-சைனா அரிசியை நாம் தடுப்பதுபோல பர்மா அரிசியையும் தடுத்துத் தான் தீரவேண்டும். மூன்று வருஷங்களுக்கு முன் ஸயாம் அரிசி நமது அரிசி வியாபாரத்தை வதை செய்ததை நாம் மறந்துவிடவில்லை. உலக நிலைமையாலும், ஸயாம் அரிசியாலும் எற்கனவே கஷ்டமான நிலை உண்டாகி இருக்கிறது. மற்ற விஷயங்களில் செய்வது போலவே, இந்திய சர்க்கார் இந்திய அரிசிக்குப் பாதுகாப்பு அளிக்கத் தயங்கி கடைசியில் ஒன்றுக்கும் உதவாத பரிகாரத்தைச் செய்தார்கள். அதாவது ஒவ்வொரு மணங்கு அரிசி மீதும் 12 அணா இறக்குமதித் தீர்வை விதித்தார்கள்.

இதனால் இறக்குமதி ஓரளவு குறைந்த போதிலும் அது நின்றபாடில்லை.

இந்தியாவின் அரிசி வியாபாரம் இன்னும் தடுமாற்றத்தில் இருக்கிறது. இரண்டு வருஷ காலமாக அரிசி விலை இறங்கிக்கொண்டேயிருக்கிறது.

நாம் அயல்நாட்டு மார்க்கட்டை இழந்துவிட்ட படியாலும் அயல்நாட்டுப் போட்டி எற்பட்டிருக்கிறபடியாலும் நாம் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தவேண்டும். ஜனத்தொகையில் அபிவிருத்தி எற்பட்டிருப்பதையும், பொதுவாக ஜனங்கள் போஷணைக்குறைவையும் பார்க்கும்போது உள்நாட்டுத் தேவையை அதிகரித்து, உள்நாட்டு உற்பத்தியையும் உள்நாட்டு தேவையையும் சரிக்கட்டலாம் என்று தோன்றுகிறது.

ஒட்டாவா ஒப்பந்தத்தால் பிரிட்டன் இந்திய அரிசிக்குச் சிறிது சலுகை காண்பித்த போதிலும் அதனால் பலன் ஒன்றும் எற்படவில்லை. இந்திய அரிசி நன்றாகத் தீட்டப்படாமலும் வசீகரம் இல்லாமலும் இருப்பதால் பிரிட்டிஷ் ஜனங்கள் அதை வாங்குவதில்லை என்று புகார் இருக்கிறது. மேலும் அரிசி வியாபாரம் சரியான கட்டுக்கோப்பான முறையில் நிர்வகிக்கப்படவில்லை. அநேகமாக நம் வியாபாரிகள் அயல்நாட்டு வாங்குவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயல்வதில்லை. இந்த வழிகளில் கட்டுக்கோப்பான முயற்சிகள் எடுத்துக்கொண்டால் அயல் தேசத்தில் இந்திய அரிசி இழந்த புகழை மீண்டும் பெறுவது அசாத்தியமல்ல.

(இந்தியன் பினான்ஸ் வருஷ அறிக்கை.)

ஏது, ரொம்ப நாணிக் கூசிக்கொண்டு ஓரமாய்ப் போய் நிற்கிறாப் போலே இருக்கே! புதுசாப் புக்ககம் போறேனா?

—'தியாக பூமி'யில் ஓர் காட்சி.